SRI LANK... M CONGRESS


# திசை

THISAI


உள்ளே ...


- சிக்குப்பட்டுள்ள பிரேமதாஸ !
- இடைக்கால அரசு தேவையா?
- 1983 ஆம் ஆண்டின் ''ஒக்ஸ்போட்'' மூளை
- தமிழ் பேசும் அரசியல் கைதிகள்
- 2010 இல் உலகம் : 'பென்ரகனின்' ஆய்வு நூல்
- போதைப் பொருட்கள் ; உங்களுக்குத் தெரியுமா?
- போர் ஓவியங்கள்
- நாடக நெறியாள்கை பற்றி...


திசை 1 | 15-9-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 36

# இந்தியப்படை விலகலை சோவியத் விரும்புகிறது

**இலங்கையிலிருந்து இந்தியப்படை விலக்கப்பட வேண்டும் என்று சோவியத் வற்புறுத்துகிறது. படைவிலகல்பற்றி மென்மையான வார்த்தைகளைத்தான சோவியத் பிரயோகித்துள்ள போதிலும் ராஜதந்திரப் பரிபாசையின்படி அது உண்மையில் ஒரு வற்புறுத்தலே. இந்தியாவின மிக நெருங்கிய நட்பு நாடாகிய சோவியத்தின் இத்தகைய போக்கு அரசியல் அரங்கில் பல புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது.**

தனது நட்பு நாட்டின் இத்தகைய போக்குக் காரணமாக தனது நடைமுறையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. சோவியத்தின் இத்தகைய போக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல; மாறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடியதே.

கெடுபிடி யுத்த (Cold war) சர்வதேச நிலை (International Order) தற்போது மாறியுள்ளது. அமெரிக்காவுடனான இந்த கெடுபிடியுத்தத்திற்கு முகம் கொடுக்க சோவியத்திற்கு இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டின் அனுசரணை அவசியப்பட்டது, அதனால் தனது விருப்பங்களை மீறியும் இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் சோவியத்திற்கு இருந்தது.

ஆனால கெடுபிடியுத்த சர்வதேச நிலையை அன்று சோவியத் உடைத்து விட்டது. மேலும் ஆப்கானில் தனது படையை வைத்திருந்தபோது இந்தியாவின் ஆதரவு தேவைப்பட்ட நிலை தற்போது சோவியத்திற்கு இல்லை. ஆதலினால் நீண்டகால நோக்கில் இந்தியாவினால் வரக்கூடிய ஆபத்து என்ற நோக்குக்கு சோவியத் தற்போது முன்னுரிமை கொடுக்க விரும்புகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா பலம்பொருந்திய நாடென்ற வகையில் அதன் கையில் இப்பிராந்தியம் முழுவதும் கட்டுப்படுவதற்கான வாய்ப்புள்ளது அவ்வாறு கட்டுப்பட்டால் சோவியத் இந்தியாவுக்கு அண்மையில் உள்ளதென்ற வகையில் அமெரிக்காவை விட சோவியத்தான் இந்தியாவால் அதிகம் பாதிக்கப்படும். எனவே இந்தியாவின் பெருவளர்ச்சி இப்பிராந்தியத்தில் ஏற்படாது பார்த்துக்கொள்ள சோவியத் விரும்புகிறது ஆதலினால் சோவியத் லங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசுக்குச் சற்று சாதகமாக நடக்க விரும்புகிறது.

இந்தியப்படை விலக்கப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கும் சோவியத் வெளிவிவகார கொள்கை வகுப்பிற்கான தென்னாசியக் குழுத் தலைவர், உபதலைவர் போன்றோரின் கருத்துக்களையும், இலங்கையின் கோரிக்கைக்கு இந்தியா சிறிது இறங்கி வரும் போக்கையும் பரிசீலிக்கும் அரசியல் அவதானிகள் இதை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களவரும் தமிழரும் உண்மையைஉணரவேண்டும்

— ஜே. திவ்யநாதன் எம். பி.

''கொழும்பிலும் மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழ் தமிழர்கள் வடக்கிலும் கிழக்கிலும் அகதிகளாகச் சென்ற நிலை மாறி, வட-கிழக்குத் தமிழ் இளைஞர்கள் தம் பெற்றோர் சகிதம் கொழும்பு வீதிகளிலே, மடங்களிலே, பாடசாலைகளிலே அகதிகளாகத் தஞ்சம் புகும் நிலைகண்டு வேதனைப்படாதவர் யார்?''

அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. யான ஜே. திவ்யநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது : ''தமிழினம் தனக்குள்ளே முரண்பட்டு அழிவது கண்டு சிங்களவர்களும்; சிங்கள இளைஞர்கள் சின்னாபின்னமாவதைக் கண்டு தமிழர்களும் திருப்திகாணும் கீழ்த்தர மனோபாவத்தை மாற்றிட எம்நாட்டவர்—எம் சந்ததி — எமது மனிதவளம் அழிகின்றது என்ற உண்மையை உணரவேண்டும். இல்லாவிடில் இன்னும்பல அந்நிய ஊடுருவல்கள் இங்கே ஏற்படலாம், அவை மீண்டும் புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கவும் வழியமைக்கும் துரோகத்தை நாமே செய்தவர்களாவோம்.''

## ஜே. ஆரது சகோதரர் மனைவி கொலையின் அரசியல் அதிர்வுகள்

ஜே. ஆர். ஜயவர்த்தனவின் சகோதரரின் மனைவி கிளாடிஷ் ஜயவர்த்தன கொலைசெய்யப்பட்டமையானது புதிய பல அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதென அவதானிகள் கருதுகின்றனர்.

பிரேமதாஸவின் அரசியல் நடிவடிக்கைகளைக் குறைகூறும் ஓர் அணியினர் ஐ. தே. க. வுக்குள் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக ஜே. ஆர். லலித், காமினி போன்றோர் இவ்வாறு குறைகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை, ''திசை'' பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரேமதாஸவைக் குறை கூறும் அணியினர் பக்கம் இக்கொலை நிகழ்ந்துள்ளது இது, பல புதிய அதிர்வலைகளை இப்போது ஏற்படுத்தியுள்ளது. பிரேமதாஸவிலிருந்து அதிக தூரம் விலகிநிற்பதனால் தம்மைப் பாதுகாப்பது கடினமென, இவர்கள் உணரலாம். எனவே ஜே. வி. பிக்கு எதிராக பிரேமாவுடன் அதிகம் இணைந்து செயற்படவேண்டிய அவசியத்தை. இக்கொலை உணர்த்தக்கூடும் எனக் கருதப்படுகிறது.

இக்கொலையை ஜே. வி. பி. யினர் செய்ததாக பொலிஸார் கருதுகின்றனர். உண்மையில் இக்கொலையை ஜே. வி. பி. யினர் செய்திருந்தால் அது ஐ தே. க. வுக்குள் உள்ள வேறுபாடுகளை மறக்கவைத்து பிரேமாவை மேலும் பலப்படுத்த உதவுமேதவிர, பலவீனப்படுத்தாது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### புதிய கைதிகள்

முன்னர் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் போராளி இயக்கங்களை அழிக்கும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட இலங்கை அரசின் சகல ராணுவ அமைப்புகளும் தற்போது தலை கீழ் மாற்றம் அடைந்து வருவது மிகமுக்கியமான அம்சமாகும்.

காலிப்பகுதியில் தமிழ் இளைஞர்களை அடைத்துவைப்பதற்காகப் புதிதாகக் கட்டப்பட்ட பூசா ராணுவ முகாம்களோடு சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் யாவும் தற்போது சிங்கள ராணுவத்தினரின் குடும்பங்களின் வாசஸ்தலங்களாக மாற்றப்பட இருப்பதாக செய்திவந்துள்ளது. இக் கட்டிடங்களில் குடியமரப் போகும் ராணுவக் குடும்பங்கள் கைதிகள் அல்லாவிட்டாலும், கைதிகளின் மனோ நிலையிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஜே. வி. பி. யினரால் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

### மரணத்தைத் தவிர்க்க மாற்றம் (மார்க்கம்)

முன்னர், வடக்கு - கிழக்குப் பகுதிக்கு ராணுவ வீரரொருவர் மாற்றப் பட்டால் அது சோக நிகழ்வாகவே கருதப்பட்டது. தமிழ்ப் போராளிகளால் அவர் கொல்லப்படலாம் என்பதே இதற்குக் காரணம். ஆனால் இன்று முழுச் சிங்கள ராணுவ வீரரும் வட-கிழக்குக்கு மாற்றம் எடுத்து வரவே முயற்சிக்கிறார்களாம். இதற்கும் ஜே. வி. பி.யினரின் நடவடிக்கைகளே காரணம்.

### குடும்பத்தைக் காப்பாற்ற

சிங்கள அரசியல் கட்சிகளான ஐ தே. க., சு. க. போன்றவற்றின் பிரமுகர்கள் பலர் சுட்டுக் கொல்லப்படுவதால், தற்போது இத்தகைய பிரமுகர்களின் புதல்வர்கள் ஜே.வி பி.யில் சேர்ந்து வருவதாகவும் இதனால் இவர்களது குடும்பங்கள் காப்பாற்றப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### அரச தந்திரம்

தற்போது ஜே.வி பி யினருக்கு எதிராக ராணுவம் தீவிர போக்கை எடுப்பதற்குக் காரணம், அரசாங்கம் மறைமுகமாகப் பல தந்திரங்களைக் கையாண்டதன் விளைவே எனக் கூறப்படுகிறது.

திசை THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு.
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# எமது பகுதியில் நூதனசாலை முறையாகப் பேணப்படுமா?


பழைய காலத்திற்குரிய தொல்பொருட்களைப் பாதுகாத்துப் பேணிவைக்கும் மரபானது, மேலைத்தேய நாடுகளில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. அதற்குரிய காரணமாக, அவர்கள் வரலாறுபற்றிய ஒரு விரிவான பார்வையை வைத்திருப்பதையே காணமுடியும். மனிதன் வரிவடிவங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்புள்ள காலப்பகுதியே, மனித வரலாற்றில் நீண்ட காலமாகவுள்ளது. (மனிதன் தோன்றிய காலத்திலிருந்து பார்த்தால் 99% காலப்பகுதி அவ்வாறுனது). இந்நிலையில் அப் பண்டைய மக்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு, அவர்களால் பாவிக்கப்பட்ட பொருட்களே முக்கிய தடயமாக அமைகிறது. அவ்வாறுன பொருட்களைக் கொண்டு அக்கால மக்களது வாழ்வுமுறை, உணவுவகைகள், வணக்கமுறைகள், நம்பிக்கைகள், பொருளாதாரம், தொழில் நுட்பம், கலைரசனை, நிர்வாக முறைகள் என்பவற்றுடன் அக்காலத்திற்குரிய கால நிலையினைக்கூட அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையைப் பொறுத்து, குறிப்பாக வடக்கு—கிழக்குப் பகுதிகளின் பாரம்பரியத் தன்மையை மதிப்பீடு செய்யவல்ல அகழ்வாய்வுகள், இதுவரை சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது உண்மை. இருந்தபோதும் அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்ட அரும் பொருட்கள், யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரும்பொருட் காட்சியகத்தில் (Museum) ஓரளவுக்காவது பேணப்பட்டு வந்தபோதிலும், அண்மைக்காலங்களில் அதன் கட்டமைப்பு சிதைக்கப்பட்டு விட்டது என்பது தெளிவாகிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் 1987 காலப்பகுதியில் வரலாற்றுத் துறையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறிய நூதனசாலையில், வடமாகாணத்தின் பாரம்பரியத்தை ஓரளவுக்காவது எடுத்துக்காட்டக் கூடிய - ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள், குடத்தனைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் கிணற்றுச் சுவர்கள் (வட்டமான அமைப்பு), சுண்ணும்புக் கற்களுக்குள் காணப்பட்ட படிவுகள் (Fossil), பலதரப்பட்ட சிற்பங்கள், ஓலைச்சுவடிகள், பல்வேறு காலப்பகுதிக்குரிய உலோக, தாள் நாணயங்கள், கல்லாயுதங்கள், சில கல்வெட்டுக்கள் போன்றன பேணப்பட்டிருந்தன. ஆயினும் அண்மைக்கால நிகழ்வுகளால் அவையனைத்தும் முற்றுமுழுதாகச் சீரழிக்கப்பட்டமை, தமிழ் மக்களது துரதிர்ஷ்டவசமான ஒரு நிகழ்வாகவே கொள்ளப்படமுடியும்.

ஒருமக்கள்கூட்டத்தின் பாரம்பரியத்தின் வெளிப்பாடான கலை மரபுகள், இலக்கியங்கள், பண்பாட்டம்சங்கள், அரும் பொருட்கள் போன்றன காலத்துக்குக்காலம் மாற்றம் செய்யப்படாமல் — பழைமையான தன்மையுடன் — உள்ளவாறே பேணப்படல் வேண்டும். அந்த வகையில் ஒரு முக்கியத்துவமான அரும்பொருட் காட்சிச்சாலையை வடக்கு — கிழக்குப் பகுதிகளில் அமைப்பதற்கு, அத்துறை சார்ந்த — பாரம்பரியத்தின் பெறுமானத்தை உணர்ந்த — அனைவரும் முயற்சிக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றுகும். அவ்வாறுன முயற்சியானது, இலங்கைவாழ் தமிழ் மக்கள் எதிர்காலத்திலாவது தமது பாரம்பரிய தன்மைகளை உலக மக்களின் கண்களுக்குத் தெரியும் வண்ணம் உயர்த்திக் காட்ட, வழிவகுக்கும்.

ஏ. சுபாஷ்
யாழ்ப்பாணம்.



## மலையகமக்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரை

நான் தங்கள் 'திசை' வாரப் பத்திரிகையின் பக்கம் சாரா நடுநிலையான அரசியல் கட்டுரைகளை விரும்பிப் படிப்பவன். மேலும், நமது நாட்டின் பொருளாதாரத்தில் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு வர்க்கத்தின் — தோட்ட மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி, அவர்களின் அடிப்படைத் தேவைகள், உறையுள், கல்வி, ஊதியம் போன்றவற்றில் அடக்குமுறை வர்க்கத்திடம் இருந்து விடுதலை பெற்ற இனமாகத் தற்போது காணப்படுகின்றனரா என்பது பற்றி, ஒரு தெளிவான ஆய்வுக் கட்டுரையொன்றை வெளியிட வேண்டுமென, தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வ. பரமேஸ்வரம்பிள்ளை
வட்டுக்கோட்டை.

## திறவுகோல் தேடவிடும் சொர்க்கம் குறுநாவல்

'திசை' தந்த ஸ்ரீதரன் அவர்களின் 'சொர்க்கம்' என்ற குறுநாவல் எனக்குள் பல அதிர்வுகளை ஏற்படுத்திவிட்டது.

'ஒருவித லேசான மர்மமும் அந்த மர்மத்தை விளக்க வாசகனையே திறவுகோல் தேடவிடுவதும் உயர்ந்த இலக்கியத்தின் அரிய பண்பாகும்' என்ற பிரெஞ்சுக் கவிஞர் 'மலர்மே' யின் கருத்தை மு.பொ. அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள் (அலை-2). இக்கருத்தோடு எனக்குக் கூடுதல் உடன்பாடு.

இதற்கு ஒப்ப அமைந்த ஸ்ரீதரன் அவர்களின் 'சொர்க்கம்' என்ற குறுநாவலைத் தொகுத்து பலமுறை வாசித்தேன். ஒவ்வொரு வாசிப்பின் போதும் எனக்குள் புதிய புதிய உணர்வுகள் கிளர்ந்தெழுந்தது.

'போலித்தனங்கள்' மலிந்த இன்றைய இலக்கிய சூழலில் நல்லதோர் குறுநாவலைத் தந்த 'திசை'க்கும் — ஸ்ரீதரன் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இனி, —'திசை' அடுத்துத் தரும் தொடர்கதை என்ன?

நவாஸ் ஏ. ஹமீட்
(ஈழக்கவி)
வெலிமடை.


Remington Tamil Typewriters
70" and 27" arrived.
Only Limited quantities available.

Imported and locally manufactured
Hand pumps
available for sales.

Agent for Gestetner Products

Samuel, Sons and Co. Ltd.,
Jaffna.



வசந்தா பார்மஸி அன் குரூேசறி


டாக்டர்களின் ஆலோசனையின் பின் சகல ஆங்கில மருந்துகளிற்கும்

வசந்தா பார்மஸி அன் குரூேசறி

ஆங்கில மருந்து வகைகள் என்றதும்
உங்கள் நினைவில் என்றும்

வசந்தா பார்மஸி அன் குரூேசறி

இல. 280, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அண்ட பிண்ட சராசரங்கள் அத்தனைக்கும் படி அளப்பவர் திருமால்தான் என்று, புராணங்கள்சொல்லுகின்றன. படி அளக்கும் தொழிலுக்கு ஒரு தனி இலாகாவே அமைத்துள்ளார்கள் போலும். எப்படியாயினும் ஜீவராசிகளுக்கெல்லாம் படியளப்பது என்பது, எப்படியோ ஒரு முக்கியமான தொழில்தான்; அது அந்தக் காலம்.

இது இந்தக் காலம் — எண்சாண் உடம்பிலும் வயிறே பிரதானம்எனலாம். காரணம், உலகத்தின் தத்துவங்களையெல்லாம் வயிற்றை வைத்தே விளக்கிவிடலாம். இந்த வயிற்றுக்குப் படி அளக்கும் பணியை யாழ்ப்பாணத்தில், புகையிரத நிலையத்திலிருந்து கூப்பிடு தூரத்துக்கு அப்பால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைஒன்றும் நெடுங்காலமாகச் செய்து வருகிறது. இங்கு சமீபகாலமாகப் புது முகாமையாளரின் கீழ் செப்படி வித்தை நடப்பதாகப்,பாவனையாளரும் நுகர்வோரும் அபவாதமாகப் பேசுகிருர்கள். தராசின் கோலை மந்திரக்கோலாக்கி நிறையைக் குறைக்கும் 'விற்பனர்கள்' இந்தக் கடையில் இருக்கிருர்கள், தராசு நியாயம் செய்யவேண்டியது என்ருலும் அநியாயத்தின் சின்னமாகவே இங்கு மாத்திரமல்ல, எங்கும் விளங்குகிறது. நீதி தேவதையின் தராசும் அப்படியே!

இப்படியிருக்க, "வறுமை நிவாரண உணவு முத்திரையின் ஐந்தாவது புள்ளிக்கு பண்டங்கள் வாங்குவதற்கு, இந்த மாதம் 9-ஆம் திகதி கடைசிநாள்" என்று கவனிக்க முடியாத இடத்தில், கவனிப்பாரற்று ஒரு விளம்பரம் தொங்கவிடப்பட்டிருக்கும். கேள்விப்பட்டு இப்பகுதியிலுள்ள நுகர்வோர் எரிக்கும் வெயிலில் பன்னிரண்டு மணிக்கு முன் வந்தாலும், "கணக்கு முடித்து விட்டன். கூப்பன் சாமான் தர முடியாது" என்று ஒரு குரல் ஒலிக்கும். சில வாயில்லாப் பூச்சிகள் திரும்பிப் போய்விடுவார்கள். தட்டிக் கேட்பவர்கள் பாக்கியசாலிகள். அவ்வளவுதான்! மற்றும்படி, கடைசியில் கணக்கும் பார்த்து மிகுதிக் காசுக்கு தீப் பெட்டி வழங்கும் வைபவம் இங்கு சர்வசகஜம். இவர்கள் தரும் தீப்பெட்டிகளில் உள்ள குச்சுக்களில் மருந்து, மருந்துக்கும் கிடையாதாம். இவற்றையெல்லாம் யாரிடம் சொல்லி அழுவது என்று நுகர்வோர் அங்கலாய்க்கின்றனர். இச் சங்கக்கிளை நிர்வாகக் குழுவே, தொடக்கம் முதல் இன்றுவரை விலாசமில்லாமல் போய் விட்டதாம். பூனையில்லா வீட்டில் எலிக்குக் கொண்டாட்டம்தான். எப்படியாயினும், கோடிட்டுக் காட்டியுள்ளபடி வினை விதைத்தவன் வினை அளப்பான். □

நக்கீரன்

# போதைப் பொருட்கள்:
# உங்களுக்குத் தெரியுமா?

**1. போதைப் பொருள் என்றால் என்ன?**

ஒரு மனிதனின் மனநிலையை மாற்றி மகிழ்வு நிரம்பிய மன நிறைவுள்ள நிலையைக் கொடுக்கக்கூடியதும் மனிதனின் தனித் தன்மையை அழிக்கக்கூடியதும் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான இயற்கையாகப் பெறப்படுகின்ற அல்லது செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற இரசாயனப் பொருளே போதைப் பொருள் எனப்படும்.

**2. போதைப் பொருட்களால் மனித குலத்துக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?**

ஒன்றுமில்லை.

**3. அப்படியானால் தீமைகள் உண்டா?**

ஆம் நிறைய உண்டு. போதைப் பொருள் பாவிக்கும் பழக்கம் மனித உயிருக்கே உலைவைக்கின்றது. சமூக விரோதச் செயல்களாகிய கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, பாலியல் துர்நடத்தை முதலியவற்றுக்குக் காரணமாகின்றது. மனித குலத்தை வேரறுத்து விடுகின்றது. மனித வாழ்க்கைக்கு ஒரு சவாலாக அமைகின்றது.

**4. போதைப் பொருட்கள் எப்போது யாரால் இலங்கை மக்களுக்கு அறிமுகப் படுத்தப் பட்டது?**

முற்காலத்தில் சிறிய அளவில் பாவிக்கப்பட்டு வந்த போதிலும் 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உல்லாசப் பிரயாணிகளின் வருகையினாலும், சர்வதேசப் போதைப் பயங்கர வாதத்தினாலும் பெருமளவில் அறிமுகப்படுத்தப் பட்டது.

**5. யார் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள்?**

13-30 வயதுடைய இளைஞர்கள், யுவதிகள் போதைப் பொருட்களைப் பாவிக்கத் தொடங்கிப் பின் அவற்றுக்கு நிரந்தர அடிமைகளாகின்றார்கள்.

**6 எவ்வாறு போதைப்பொருட்களுக்கு அடிமையாகின்றார்கள்?**

அ. பரீட்சார்த்த ரீதியில்ஆரம்பித்துப் பின்னர் நிரந்தர அடிமைகளாகின்றார்கள்.

ஆ. போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையான நண்பர்கள் மூலம் பலவறு சிலர் அடிமைகளாகின்றார்கள்.

இ. போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களால் அடிமைகளாக்கப்படுகின்றார்கள்.

ஈ. விரக்தி நிலையிலிருந்து விடுபடுவதற்காகப் பாவித்துப், பின்பு பழக்கத்தை விடமுடியாமல் அடிமைகளாகின்றார்கள்.

உ. சிலர் நோய்களுக்கு மருந்தாகப்பாவிக்கத் தொடங்கி, பின்பு அடிமைகளாகி விடுகின்றார்கள்.

ஊ. செயற்கை மனோநிலையை அடையும் நோக்கத்துடன் ஆரம்பத்தில் தொடங்கி,பின்பு அடிமைகளாகிவிடுகின்றார்கள்.

எ. போதைப்பொருள் கடத்தல் வியாபாரம் செய்பவர்களில் சிலர் இந்தப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விடுகின்றார்கள்.

**7. எல்லோரும் இந்தப் பழக்கத்திற்கு அடிமைப்படுகின்றார்களா?**

இல்லை. ஆனால் சமூக சூழ்நிலை சிலரை ஈர்க்கக்கூடும். பிரதானமாக பெற்றோரின் அன்பும் ஆதரவும் இல்லாத பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் இளைஞர்கள் வெகு விரைவில் ஈர்க்கப்படுகிறார்கள். மதுபானம் அருந்தும் புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் போதைப் பொருள் பழக்கத்திற்கு கூடுதலாக அடிமைப்படுகின்றார்கள்.

மனோதத்துவ ரீதியில், ஒரு சில குறைபாடுள்ளவர்கள் மிகவும் விரைவாக ஈர்க்கப் படுகின்றார்கள்.

**8. இலங்கையில் பெரும்பாலும் பாவிக்கப்படும் போதைப் பொருடகள் யாவை?**

அ. அபின் – (Opium, Morphine)

ஆ. கஞ்சா – (Ganja. Cannabis, Hashish, Marihuana)

இ. ஹெரோயின் – (Brown sugar, "பவுடர்", குடு)

வைத்திய கலாநிதி
**வே. யோகநாதன்**

**9. போதைப் பொருட்களைப் எப்படிப் பாவிப்பார்கள்?**

பொதுவாக வாய்மூலம் உட்கொள்தல், ஊசிமூலம் செலுத்துதல், புகைத்தல், நுகர்தல்– முறைகள் மருந்துக்கு மருந்து வித்தியாசப்படலாம்.

**10. போதைப் பொருட்களால் ஏற்படும் பயங்கர விளைவுகள் என்ன?**

அ. மிதமிஞ்சிய அளவை உட்கொள்ளுதல் (Over Dosage), அறிவற்ற நிலை (Coma), மரணம் (Death), தற்கொலை (Suicide).

ஆ. விபத்து (Accident).

இ. குழப்பமான மனநிலை, பயங்கரக்காட்சி, உளவியற் கோளாறு, மனோவியாதி.

ஈ. நாளடைவில் போதைவஸ்தில் தங்கியிருக்கிற நிலை, அவற்றிற்கு அடிமையாகும் நிலை.

உ. ஊசிமூலம் செலுத்தினால் புண், சீழ்கட்டுதல், குருதியில் நஞ்சேறல் (Septicaemia) ஏற்புவலி. (Tetanus) செங்கண்மாரி, மேகநோய், எயிட்ஸ்.

**11. போதைப் பொருட்கள் பாவிப்பதால் விளையும் அறிகுறிகள்?.**

I. மகிழ்வு நிரம்பிய மன நிறைவு நிலை

II. உடல் மனம் தளர்ச்சி அடைந்தநிலை.

III. சுவாசம் தளர்ச்சியடைதல்.

IV. இதய நாடித்துடிப்புகள் அதிகரித்தல்.

V. நித்திரையின்மை.

VI. பசி அதிகரிப்பு.

VII. கண் சிவப்படைதல்.

VIII. கண், மூக்கு, வாய் ஆகியவற்றிலிருது நீர் வடிதல்.

IX. பேச்சுத் தடுமாறல்.

X. ஒழுங்கற்றுப்போன நடை, கைகால் நடுக்கம்.

XI. ஓங்காளம், சத்தி.

XII. மலச்சிக்கல், சிறுநீர் கழிப்பதில் கஷ்டம்,

XIII. வயிற்றுவலி,

XIV. போலிக்கற்பனை, உளமாயம்.

XV. மயிர்சிலிர்த்தல்.

**12. காலகதியில் வரும் மாற்றங்கள்?**

அ. மகிழ்வு நிரம்பிய மன நிறைவு நிலை, திடீரென சிடுசிடுப்பு, மந்தமான நிலைக்கு மாற்றமடைதல்.

ஆ. எதிர் பாராத முன்கோபம் அல்லது சண்டையிடுதல்.

இ தோற்றத்தில் கவலையீனமாக இருத்தல்.

ஈ. பசியின்மை.

உ. உடம்பு மெலிந்திருத்தல், அசுத்தமாகவிருத்தல்

ஊ. பொய்பேசுதல், களவெடுத்தல், மற்றவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொள்ளுதல்.

எ. அரைத்தூக்கம் அல்லது தூக்கமின்மை,

ஏ படிப்பு, தொழில், வீட்டு வேலை முதலியனவற்றில் நாட்டம் குறைதல்.

ஒ. உடலில் காயங்கள் காணப் படுதல்.

**13. இந்தக் கொடுமைகளிலிருந்து மீளமுடியுமா?**

ஆம்.

**14. எப்படி?**

போதைப்பழக்கத்தை ஒழிக்கும் முயற்சியைப் பல துறைகளாகப் பிரிக்கலாம்.

அ. அறிவுறுத்தல்

நோய்க்குச் சிகிச்சை செய்வதைவிட நோய்வராது தடுப்பதே சிறந்தது என்ற கூற்றைக் கையாளவேண்டும். ஆகவே பெற்றோர், ஆசிரியர் ஆகியோரினதும் சமூக சேவை ஸ்தாபனங்களாகிய லயன்ஸ், ரோட்டரி போன்ற ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பு, ஒலி, ஒளி சாதனங்கள் மூலம் விளம்பரம், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலம் கல்வி அறிவுறுத்தல்கள் அத்தியாவசியமாகவிருக்கும்.

ஆ. சட்டங்கள் இயற்றுதலும் அதனை நடைமுறைப்படுத்துதலும், அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இ. போதைப்பழக்கம் உள்ளவர்களின் மனமாற்றம் முக்கியம் – வாழ்வு என்பது இன்பம் தரக்கூடியதும் பயனுள்ளதுமாக இருக்கவேண்டுமென்ற தத்துவம் இளையர்களுக்குப்புரிய வைக்கவேண்டும். போதைப்பழக்கத்தை விட்டு சமயம், விளையாட்டு, நாடகம் இலக்கியம், சமூக சேவை முதலிய அர்த்தமுள்ள வாழ்க்கையில் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும்.

ஈ. மருத்துவசிகிச்சை.

உ. புனர்வாழ்வு.

ஊ. கண்காணிப்பு. □

# ஐ:தே.க. எம். பிக்கள் கட்சிமாற முடியாத துர்(ர்)ப்பாக்கி(ய) அரசியல்

பிரேமதாஸ அரசாங்கத்தின் மீது ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உள்ள அதிருப்தி இப்பொழுது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் ஐ.தே.க விலிருந்து எம்.பி.க்கள் வெளியேறக் கூடுமா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அவ்வாறு எம்.பிக்கள் வெளியேறுவதென்பது நினைத்த மாத்திரத்தில் நிகழக்கூடிய காரியமல்ல. ஒருபுறம சட்ட ரீதியான தடை, மறுபுறம் நடைமுறை ரீதியான தடை என்பன உண்டு. சட்ட ரீதியான தடைகளைத் தாண்டுவதற்கு தற்போது சில வழிகள் உண்டு. ஆனால் நடைமுறை ரீதியான தடையைத் தாண்டுவது மிகவும் கடினம்.

கட்சி தாவாத் தடைச் சட்டத்தின் கீழ் கட்சியின் மொத்த எம். பிக்களில் 1/3 பங்கு எம். பிக்களுக்கு மேல் கட்சியை விட்டு வெளியேறினால் அவர்களின் பதவியைப் பறிக்கவோ அல்லது வேறு ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கவோ கட்சிக்கு அதிகாரமில்லை. 1/3 பங்குக்கு குறைவான உறுப்பினர்கள் விலகும் பட்சத்திற்கூட அவர்களது பதவியைக் காப்பாற்ற ஒரு வழி உண்டு. அதாவது பாராளுமன்றம் அவ்வாறானவர்கள் சம்பந்தமாக விரும்பியவாறு வகைசெய்யலாம் என்பது. உதாரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இராசதுரை வெளியேறிய போது அவரது பதவியை இரத்தாக்காது பாராளுமன்றம் அவரை ஐ. தே. க. எம். பி. யாக இருக்க வகை செய்தது.

எனவே சட்டரீதியான தடைகளை கருத்திற்கொண்டு தற்போதைய நிலையினை ஆராயுமிடத்து அத்தடைகளை உடைப்பது இலகுவானது என்பது தெளிவாகும். கட்சி எம்பிக்கள் மத்தியில் அதிருப்தி அதிகமாக இருக்கின்றமையால் 1/3 பங்கு எம்பிக்கள் வரை வெளியேறக்கூடிய வாய்ப்புண்டு அவ்வாறு 1/3 பங்கு எம்பிக்கள் வரை வெளியேற முடியாத இடத்து குறைந்தது 13 எம்பிக்களாவது வெளியேற முடியுமானால், பாராளுமன்றம் விரும்பியவாறு வகை செய்யலாம் என்ற விதிக்கிணங்க எதிர்க்கட்சியினரின் வாக்குக்களைப் பெற்று தமது பதவிகளைப் பாதுகாப்பது சாத்தியம் எனவே தற்போதைய நிலையில் ஐ.தே.க. விலிருந்து எம்பிக்கள் வெளியேற விரும்பும் பட்சத்தில் சட்டரீதியான தடையைக் கடப்பது கடினமான காரியமல்ல.

ஆனால் கடினமான காரியம் என்னவெனில் நடைமுறை சார்ந்த பிரச்சினைதான். கட்சியை விட்டு இந்த எம்பிக்கள் வெளியேறுவார்களானால் இவர்களுக்குள் போதிய பாதுகாப்பு இருக்கப் போவதில்லை. கட்சியை விட்டு இவர்கள் வெளியேறியதும் இவர்களது பாதுகாப்பு கணிசமானளவு தளர்த்தப்படலாம். கட்சியை விட்டு இவர்கள் வெளியேறிய பின்பு எந்தப் பக்கத்திலிருந்து துப்பாக்கிக் குழல்கள் நீளும் என்று சொல்லமுடியாதளவிற்கு துப்பாக்கி அரசியல் மலிந்துள்ளது. அவ்வாறு வெளியேறினால் நீருள்ளிருந்து தரையிற் தூக்கிப் போடப்பட்ட மீன்போன்ற கதிதான் பெருமளவு ஏற்படலாம். இறுதியில் மரணம் பற்றிய பற்றுவரவு ஜே.வி.பி. யின பதிவேட்டில் யாரும் பதிவு செய்து விடலாம். எனவே விரும்பினாலும் வெளியேறுவதற்கான சாத்தியப்பாடு அரிதே. இந்த எம்பிக்கள் எந்தப்பக்கம் மாறினாலும் அவர்களால் சமாதானத்தை நிலைநாட்ட முடியாதென்பதையும் அறியாதவர்களாய் இருக்கமுடியாது. அவ்வாறு மாறுவார்களானால் அரசு கவிழும் என்ற இறுதிக் கட்டத்திற்தான் மாறக்கூடும். □

# இசை பாடும் குன்று

ரஷ்யாவில் பஸ்குன்சாக் ஏரிக்கு அருகிலுள்ள பெரிய பக்தோ மலையை மக்கள் "இசைபாடும் குன்று" என்று அழைப்பது வழக்கம். மலைபாடும் இசையைக் கேட்பதற்காக இங்கே ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் வருவதுண்டு. பக்தோ மலையின் இசை ரகசியம் இப்போது வெளியாகியுள்ளது. மலையின் கிழக்குச் சரிவில் தேன் அடையில் இருப்பது போன்ற ஏராளமான ஓட்டைகளும், நுண்ணிய பாறைப் பிளவுகளும் பாறையில் வெகு ஆழம் வரையில் சென்றுள்ளன. இந்தத் திசையில் காற்றுவீசும்போது ஓட்டைகளில் புகுந்து வெவ்வேறு ஒலி அளவுகளில் ரீங்காரம் செய்கிறது. இந்த ரீங்காரத்தைக் கற்பனைச் செறிவுடன் கவனிப்பவர்களுக்கு வெவ்வேறு ராகங்களில் மலை பாடுவதுபோலத் தோன்றுகிறது. □

— சு. வி.

# இலங்கைச் சிறைகளில் தமிழ்பேசும் அரசியல் கைதிகள்

அன்று தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்கு முறைகள் அதிகரித்து வந்த வேளையில் அவர்கள் மத்தியிலிருந்து பல போராட்ட சக்திகள் வெளிப்பட்டன. அவை இலங்கை அரசின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்களது எதிர்ப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டன. அதே வேளை இலங்கை அரசு யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தி தமிழ் பேசும் மக்களனைவரையும் ''பயங்கரவாதி''களாக்கி எமது மக்களை அழித்தொழிக்க கங்கணங்கட்டி செயற்பட்டு வந்தது. ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியங்களில் மிக மோசமாக தினமும் தேடுதல் என்ற போர்வையில் கைதுகளும் அழித்தொழிப்பு நடவடிக்கைகளும் நடைபெற்ற வண்ணமாக எமது மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக-அநாதைகளாக நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்தனர்.

ஆயிரத்தி தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தி ஒன்பதாம் திகதி இலங்கை-இந்திய அரசுகளால் கொழும்பில் வைத்து இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவ்வொப்பந்தத்தின் 2.11 சரத்தில் பயங்கரவாத தடைச்சட்டம், அவசர கால தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும், வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களும் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை அனுபவிப்பவர்களும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கிணங்க அவ்வாண்டு புரட்டாதி மாதம் பெருந்தொகையினர் விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் இடையில் நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டவர்களினது விடுதலையும் இடைநிறுத்தப்பட்டது. அதேவேளை வடக்கு-கிழக்கிற்கு அப்பால் குறிப்பாக மலையகம் கொழும்பு பகுதிகளில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யபட்டவர்களின் விடுதலை முற்றாக மறுக்கப்பட்டது. வடக்கு-கிழக்கிற்கு அப்பால் கைது செய்யபபட்டவர்கள் இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தில் உள்ளடங்கவில்லை என்ற தவறான பிரச்சாரத்தை இலங்கை அரசு மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்ய மறுத்துவிட்டது. அதேபோலத்தான் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளையும் விடுதலை செய்ய மறுத்து விட்டது. ஒரே காரணங்களுக்காக ஒரே சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இது இலங்கை-இந்தியஒப்பந்தத்துக்கு முரணானது என்று தமிழ் பேசும் அரசியல் கைதிகள் பலமுறை சுட்டிக்காட்டி மகஜர்களையும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தினர். அவற்றுக்கான விளைவுகள் பூச்சியமாகவே அமைந்தது. சில விடுதலை அமைப்புக்கள் எடுத்த நடவடிக்கைகளினால் சிறுசிறு தொகுதியாக பலர் விடுதலை செய்யப்பட்டனர், செய்யப்பட்டுக் கொண்டும் உள்ளனர். இன்னும் ஒரு சிறு தொகையினரே சிறைச்சாலையின் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் வாடுகின்றனர்.

கடந்த காலங்களில் இலங்கை அரசினாலும், அரசு இயந்திரங்களினாலும் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளினால் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் பட்ட துன்பங்களை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். 83 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் பேசும் அரசியல் கைதிகள், தங்காலை சிறைச்சாலையில் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் பேசும் அரசியல் கைதிகள், பூஸா தற்காலிக இராணுவ முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் பேசும் அரசியல் கைதிகள் என்று, தமிழ் பேசும் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். ஆயினும் 87 ஆம் ஆண்டு ஏப்ரில் 22 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் பேசும் அரசியல் கைதிகள்இருந்த விடுதிகளை குற்றவியல் கைதிகள் தாக்கி படுகொலை செய்ய எடுத்த முயற்சியை தமிழ் பேசும் அரசியல் கைதிகள் தங்களது ஒற்றுமையினாலும் எதற்கும் துணிந்த மனத்துடனும் போராடி முறியடித்தனர். இந் ஜீவமரண போராட்டத்திலும் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகினார்கள். ஆயினும் தமது உயிர்களை காப்பாற்றிய இவர்கள் தமது உடைமைகள் யாவையும் இழந்து அநாதைகளாக பூஸா இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்ட சம்பவத்தையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இப்படியாக காலத்திற்கு காலம் இலங்கை அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலை முயற்சிகளின் மத்தியில் தமது உயிர்களுக்கு உத்தரவாதமற்ற நிலையில் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் வாடிக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் அரசியல் கைதிகள், சிங்கள அரசியல் கைதிகளிலும் (J.V.P) பார்க்ககூடிய சலுகையுடன் புதிய மகசின் சிறைச்சாலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று, இனவாதத்தையே மக்கள் மத்தியில் தூண்டிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளில் ஒன்று ஆ ''திவயின'' வின் மே மாதம் 3 ஆம் திகதிய இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இப்படியான உண்மைக்குப் புறம்பான செய்திகளை பெரும்பான்மை மக்கள் மத்தியில் வெளியிடுவதால் மேலும் தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு உத்தரவாதமற்றுப் போகின்றது என்பதை, சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும். சிறைச்சாலையினுள் நடைபெறும் சம்பவங்களை சற்றேனும் அறிந்து கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக எழுதுபவர்கள் அந்த நடைபெற்ற ஓரிரு சம்பவங்களையேனும் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக இங்கு ஓரிரு சம்பவங்களை குறிப்பிடுகின்றேன்.

தற்பொழுது தமிழ் பேசும் அரசியல் கைதிகள் புதிய மகசின் சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களையும் சிங்கள அரசியல் கைதிகள் இருக்கும் விடுதிகளையும் ஒரு கம்பி வேலியே பிரிக்கின்றது 87 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கிய தினம், சிங்கள அரசியல் கைதிகள் தாம் இருக்கும் பகுதியிலுள்ள பெரிய அரசமரத்தின் மீது கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டு தமது விடுதிகளைச் சுற்றி ஊர்வலம் நடத்தினர். அவ் ஊர்வலத்தின்போது தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். அதன் பின்னர் 88 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாய ஓராண்டு பூர்த்தி தினத்தன்றும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டு ஊர்வலம் நடத்

சிறையிலிருந்து.
**ஓர் அரசியல் கைதி**

தினர். இந்த ஊர்வலத்தின் போது ''கொடும்பாவி'' ஒன்றையும் இழுத்துச் சென்றனர். அவர்களின் ஊர்வலம் சிறைச்சாலையின் முன் கதவை நோக்கிச் சென்றது. அவர்கள் ஊர்வலம் சென்ற இடங்களில் இருந்த சுவர்களிலெல்லாம் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக கோஷங்களை எழுதினர். சிறைச்சாலையின் இரண்டாவது கதவுககருகாமையில் ''கொடும்பாவி'' எரிக்கப்பட்டு கூட்டமொன்றும் நடைபெற்றது அதேதினம் தமிழ்பேசும் அரசியல் கைதிகள் பார்க்கக்கூடிய வகையில் தமது விடுதியின் மேல் சுவரில் ''தேசாபிமானிகளே! பிரிவினை கோரிப் போராடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்குவோம்''போன்ற வாசகங்களை எழுதினார்கள். சிறைச்சாலை சட்டதிட்டங்களுக்கமைய சிறைச்சாலையினுள் ஊர்வலம் நடத்தவோ, கொடிகளைப் பறக்கவிடுவதோ, சுவர்களில் எழுதுவதோ தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆயினும் சிறையதிகாரிகள் இவற்றையெல்லாம் கண்டும் காணாததுபோல் இருந்தனர். ஒக்டோபர் புரட்சியை (ரஷ்ய) குறிக்கும் முகமாக 88 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் சிங்கள அரசியல் கைதிகள் ஓர் கண்காட்சியை நடத்தினர். அந்த கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு அவர்களின் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. காலையில் சிறைச்சாலையினுள் வந்தவர்கள் மாலை வரை விடுதிகளில் இருந்துவிட்டுச் சென்றுள்ளனர். இந்தக் கண்காட்சி நடைபெற்றதன் காரணம் அவர்களின் சிறையுடைப்புக்குத் தேவையான மூலப்பொருட்களை சிறைச்சாலையினுள் கொண்டு வருவதே. அவர்கள் எண்ணம் பூர்த்தியாகியது. டிசம்பர் 13 ஆம் திகதி சிறைச்சாலையின் பின் சுவர்களுக்குக் குண்டு வைத்துத் தகர்த்து 221 சிங்கள அரசியல் கைதிகள் தப்பியோடினர். இவ்விடத்தில் ஒன்றை குறிப்பிட வேண்டியுள்ளது. தமிழ் பேசும் அரசியல் கைதிகள் தங்களின் விடுதலைகோரி நடத்திய சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தின்போது உண்ணாவிரதிகளை அவர்களின் விடுதியுள் சென்று பார்வையிடுவதற்கு பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் அனுமதி கேட்டபோது, சிறைச்சாலை நிர்வாகம் அனுமதி வழங்க மறுத்துவிட்டது. ஆனால் சிங்கள அரசியல் கைதிகள் நடத்திய கண்காட்சிக்கு மாத்திரம் அவர்களின் உற்றார், உறவினர், நண்பர்கள் அவர்களின் விடுதிகளுக்குச் சென்று கண்காட்சியைப் பார்வையிட அனுமதி வழங்கியது. இதே போல பல சம்பவங்களில் தமிழ்பேசும் அரசியல் கைதிகளுக்கு ஒரு சட்டமும் சிங்கள அரசியல் கைதிகளுக்கு ஒரு சட்டமுமாகவே நிர்வாகம் பாரபட்சம் காட்டி வந்துள்ளது. ஒன்று இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் மீது உள்ள அடக்குமுறைகளைப்போலவே சிறைச்சாலையினுள் தமிழ்பேசும் அரசியல் கைதிகளின் மீது அடக்குமுறையை இலங்கை அரசு இயந்திரங்கள் பிரயோகிக்கின்றன. அண்மையில் தமிழ் பேசும் அரசியல் கைதி ஒருவருக்கு நடைபெற்ற சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

தமிழ் பேசும் அரசியல் கைதி ஒருவருக்கும் சிறை அதிகாரி ஒருவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஒன்று நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அவ்வதிகாரி அச்சம்பவத்தை திரிபுபடுத்தி நிர்வாகத்தில் தமிழ் பேசும் அரசியல் கைதிக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். பின்னர் ஜெயிலர் ஒருவர் தமிழ் பேசும் அரசியல் கைதியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தார். இரண்டு மாதங்களின் பின்னர் அச்சம்பவம் சிறைச்சாலை அத்தியட்சகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்பொழுது தமிழ் பேசும் அரசியல் கைதிக்கு எதிராக சிறைச்சாலை நிர்வாகம் ஒரு குற்றப்பத்திரிகையை தயார் செய்திருந்தது. அதில் சிறைச்சாலை 78 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அப்பொழுது அத்தியட்சகரினால் குற்றப் பத்திரிகை வாசித்துக் காட்டப்பட்டு நீர் குற்றவாளியா சுற்றவாளியா என்று தமிழ் பேசும் அரசியல் கைதியிடம் கேட்கப்பட்டது. தான் சுற்றவாளி என்று த. பே. அ. கைதி கூறினார். அதற்கு அத்தியட்சகர் தான் நீதிபதியாகவும் த. பே. அ. கைதியை சந்தேக நபராகவும் நிர்வாகத்தின் சாட்சிகளை அரசு தரப்பு சாட்சியாகவும் வைத்து இவ்வழக்கை விசாரிப்பதாகவும், தமிழ் பேசும் அரசியல் கைதி அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து தன்னை சுற்றவாளி என நிரூபிக்க வேண்டும் என்றும் கூறி விசாரணையை ஆரம்பித்தார். தலைமை ஜெயிலர் நிர்வாக தரப்பு சாட்சிகளை நெறிப்படுத்தினார். தமிழ்பேசும் அரசியல் கைதி சாட்சிகளை பல கோணங்களில் குறுக்கு விசாரணை செய்தார். விசாரணை மூன்று நாட்கள் இடம் பெற்றது. மூன்று நிர்வாக தரப்பு சாட்சிகளும் ஒருவருக்கு ஒருவர் முரணான வகையிலே சாட்சியளித்தனர். தமிழ் பேசும் அரசியல் கைதி அத்தியட்சகரிடம் சாட்சிகளின் வாக்குமூலத்தையும் அவர்கள் குறுக்கு விசாரணையின் போது கூறிய சாட்சிக் கோவைகளையும் தான் பார்வையிட வேண்டுமென்றும் அதனூடகவே அதிலுள்ள முரண்பாடுகளை தொகுத்து தொகுப்புரையை வழங்கமுடியுமென்றும் கூறினார் ஆனால் அத்தியட்சகர் இவரது கோரிக்கையை செவிமடுக்காமல் தான் தீர்ப்பை வழங்கப் போவதாகக் கூறினார். அவ்வேளையில் தமிழ் பேசும் அரசியல் கைதி வழக்கிலுள்ள முரண்பாடுகளை எடுத்துக் கூற முற்பட்டபோது, தான் அவற்றை செவிமடுக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி தமிழ் பேசும் அரசியல் கைதியைக் குற்றவாளியென தீர்ப்பளித்து ஒரு வாரத்துக்கு கூட்டினுள் (Cell பூட்டியும் தண்டனைச் சாப்பாடான சோறும் உப்பும் வழங்கியும் ஒரு மாத காலத்திற்கு அவரது விசிட் (Visit)ஐ இரத்து செய்துள்ளதாகவும் கூறி தண்டனை வழங்கினார். அவ்வேளையில் தமிழ் பேசும் அரசியல் கைதி சிறைச்சாலை சட்டதிட்டங்களை மீறி ஊர்வலம் நடத்தியவர்களுக்கும், கொடி பறக்க விட்டவர்களுக்கும், சுவர்களில் கோஷங்களை எழுதியவர்களுக்கும் வழங்காத தண்டனையை எப்படி எனக்கு தந்துள்ளீர்கள் என்று கேட்டபோது, இங்கு தான வைத்ததே சட்டம். ஆகவே மேலும்

(11ஆம் பக்கம் பார்க்க)

## [illegible]

*ஏகாந்தன்*

*மரிட்ஸா இஸபெல்லுக்கு நன்றியுடன்*

ஜூன் 25: ஒரு ஞாயிறு; கோடை காலத்தின் அழகிய ஆரப்பம். ஒல்லாந்து நாட்டின் சிறிய, பழைய அழகான டெல்ஃவ்ற் நகரத்தின் மீது மெல்லிய காலை ஒளி.

ஒருபால் காதலர்களின் ஒன்று கூடல் விழாவொன்று — அதனை Pink Festival எனவும் அழைப்பர் — அங்கு நடைபெற ஏற்பாடாகியிருந்தது. நான் டெல்ஃவ்ற் புகையிரத நிலையத்தில் வந்திறங்கியபோது நகர்முழுக்க ரோஸ் நிறச்சாயை விரவியிருக்கக் கண்டேன். எங்கும் ரோஸ் நிற முக்கோணக் கொடிகளும் பலூன்களும்.

ஐரோப்பிய ஒருபால் காதலர்களின் இயக்கங்கள், வரலாறு, போராட்டங்கள் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தமையால் இந்த ஒன்று கூடல் விழாவை நேரிற் பார்க்கும் 'விடுப்பார்வம்' எனக்கு இருந்தது. ஐரோப்பாவில் வருடாந்தம் நடைபெறும் இவ்விழா இம்முறை டெல்ஃவ்ற் நகரில் நடைபெற்றதும் எனக்கு வாய்ப்பாகப் போயிற்று.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவிருந்த மைதானத்துக்குச் சென்றபோது எனக்கு மிகப் பெரிய ஆச்சரியம்; ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாகப் பல்லாயிரக் கணக்கானோர் அங்கு குழுமி நின்றனர். ரோஸ் நிற ரீ சேட்டுகள் அணிந்த பெண்கள், சிறுவர்கள்; சுலோசங்கள் எழுதப்பட்ட ரோசா நிறப் பதாகைகள், பலூன்கள், முக்கோணக் கொடிகள் என டெல்ஃவ்ற் நகரமே ஒருபால் காதலர்களின் ஆட்சியிலிருந்தது போல் தோன்றிற்று.

ஒல்லாந்து நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் திரளாக வந்திருந்த மக்களிடையே ஒரு சில ஆசிய, ஆபிரிக்க நாட்டவரும் இருந்தனர்

ஒரு சிறிய ஆரம்ப வைபவத்தின் பின்னர் ஆரம்பமாயிற்று ஊர்வலம். ஊர்வலத்தில் வாத்தியக் கோஷ்டிகள் இடம்பெற்றன. இடையிடையே பாடல்கள்; பதாகைகளை உயர்த்திக் கோஷங்கள்; ஆரவாரம். கால்வாய்கள் செறிந்த டெல்ஃவ்ற் நகரின் பெரிய சிறிய தெருக்களினூடாக ஊர்வலம் நகர்கையில் வேறு திசைகளிலிருந்தும் சிறிய சிறிய ஊர்வலங்கள் வந்து இணைந்தன. களிப்பும் சாவகாசமும் தோழமையும் நிறைந்த ஒரு சூழல் உருவாகியிருந்தது.

ஊர்வலத்தில் என்னருகில் நடந்து வந்த மூன்று பெண்கள் அறிமுகமாயினர். ராங் — தாய்லாந்தைச் சேர்ந்தவர். ILIS- இலிஸ் எனப்படும் சர்வதேச லெஸ்பியன் தகவற் சேவை நிறுவனத்தில் பணியாற்றுபவர். (1980 இல் நிறுவப்பட்ட இந்த அமைப்பின் தலைமையகம், அம்ஸ்ரடாம் நகரில் உள்ளது). ஏனைய இருவரும் ஜப்பானியர். ஐந்து வருடங்களாக "ஒன்றாக வாழ்பவர்கள்."

ஆசிய மரபில் ஒருபால் உறவு பற்றிய சமூக, சமயக் கண்ணோட்டம் பற்றி உரையாடியவாறே நடந்தோம். தாய்லாந்து நாட்டு ஐதீகங்களிலும் மரபு வழிக் கதைகளிலும் காணப்படும் தகவல்களைக் கூறிக் கொண்டு வந்த ராங், இரு பெண் காதலர்களைச் சித்திரிக்கும் தாய்லாந்து நாட்டின் பண்டைய சுவர்ச் சித்திரம் ஒன்றன் சிறிய அளவிலான பிரதி ஒன்றையும் தனது தகவல்களுக்கு ஆதாரமாகக் காட்டினார்.

ஒருபால் உறவு, பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இன்று சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. Gay Movement எனப்படும் ஆண்கள் ஒருபால் உறவும், Lesbian Movement எனும் பெண்கள் ஒருபால் உறவு இயக்கமும் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளதுடன், பல முற்போக்கான அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பதிலும் இவை பிரதானம் பெற்றுள்ளன. குறிப்பாக, உலகராணுவமயமாக்கலுக்கு எதிர்ப்பு, ஃபாசிஸத்துக்கு எதிர்ப்பு, நிறவெறிக்கு எதிர்ப்பு போன்ற இயக்கங்களில் ஒருபால் உறவு இயக்கங்களின் பங்களிப்பு மிகக் கணிசமானது.

இன்று மேற்கின் எந்தப் புத்தகசாலையிலும் Gay, lesbian இலக்கியங்களுக்குத் தனிப் பகுதி வைத்திருக்கிறார்கள். ஓவியம், சிற்பம், புகைபடம், நவீன கவிதை போன்ற எல்லாத் துறைகளிலும் இந்த இயக்கங்களின் வெளிப்பாடு உள்ளது.

ஆனல் ஐம்பதாம் ஆண்டுகள்வரை கூட இது முகஞ்சுளித்து ஒதுக்கப்பட்டதாகவும் குற்றமாகவும் கருதப்பட்டது. பிரபல ஆங்கில இலக்கிய கர்த்தாவான ஒஸ்கார் வைல்ட் கூட ஒருபால் உறவுக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை அனுபவித்தார். இத்தகைய தண்டனை விதிப்பதும், தமக்கு எதிரானவர்களை இவ்வகையான குற்றச்சாட்டுகளின் பேரில் துன்புறுத்துவதும் விக்டோரியன் காலத்திலிருந்து இன்று வரை, பிரித்தானியர் செய்து வருவதாகும். அநகாரிக தர்மபாலாவையும் மற்றும் பல பௌத்த மறுமலர்ச்சியாளர்களையும் ஒருபால் உறவிலீடுபடும் கீழ்த்தரமானவர்கள் என்று, அந்நாள் பிரித்தானியர் குற்றம சாட்டிப் பிரசாரம் செய்தனர். தே காலப் பகுதியில்தான் ஐரிஷ் தேசிய வாதியும் தலைவனுமான ரோஜர் கேஸ்மென்றை, பிரித்தானியர் ஒருபால் உறவிலீடுபட்டதாகக் குற்றம் சாட்டித் தூக்கிலிட்டனர்.

ஹிட்லரின் ஒதுக்கு முகாம்களில் ஒருபால காதலர்கள் என அடையாளம் காணப்பட்டோர், மிக மோசமான தண்டனைக்குள்ளாயினர். அவர்களைப் பிரித்து இனங்காண ஹிட்லர் ரோஸ் நிற முக்கோண அடையாளத்தைப் பயன்படுத்தினை. இன்று அதே அடையாளத்தை, தம்மைப் பெருமையுடன் வெளிப்படுத்திக் கொள்ள ஒருபால் உறவு இயக்கத்தினர் பயன்படுத்துகின்றனர் பல்வேறு போராட்டங்களின் பின்னர் தான ஒருபால் உறவு ஐரோப்பிய நாடுகளில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த, ஆனல் நீண்ட காலமாக ஸிகமண்ட் ஃபிராய்டின் கொள்கைகளை ஒருவகைக் குருட்டுப் பிடிவாதத்துடன் பின்பற்றி வந்த அமெரிக்க உளவியல் சிகிச்சையாளர்களின் சங்கம், ஒருபால் உறவு என்பது "நோய்க்கூறுனது" (Pathological) என்னும் தன்னுடைய பழைய கருத்தையும் இப்போது மாற்றி விட்டது. எனினும் சில வருடங்களுக்கு முன் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட செக்ஷன் 28 என்ற சட்டம், ஒருபால் காதலர்களுக்கு மிகவும் பாதகமானதாயமைந்து விட்டது. ஒருபால் உறவு பற்றி பிரசார நோக்குடன் நூல்கள், சஞ்சிகைகள் வெளியிடுதலை இச் சட்டம் குற்றம் என்று கூறுகிறது. செக்ஷன்-28 விலக்கிக் கொள்ளப்படவேண்டும் என்பது, டெல்ஃவ்ற் நகர ஊர்வலத்தின் முக்கிய கோஷங்களில் ஒன்றாகும்.

ஒருபால் உறவுக்காரர்களிடையே பல்வேறு கருத்து நிலைகள் வளர்ந்திருந்த போதிலும், அவர்களது அடிப்படைக் கருத்தொன்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: "மனிதர் தமது உறவுகள், பால் நடத்தைகள் பற்றித் தீர்மானிக்கத் தாமே உரித்துடையவர். இது தனிமனிதர்களின் தேர்வு உரிமையாகும். (A right to choose). எதிர்ப்பாற் சேர்க்கையை மாத்திரமே சாத்தியமான ஒரேயொரு உறவு முறையாகக் கொள்வது, தவறு. மனித உறவுகள், பாலியல ஆகியவை பற்றி அவர்கள் தாமே தீர்மானிக்கும் உரிமையைப் பெற வேண்டும். எதிர்ப்பாற் சேர்க்கையை மறுதலிப்பவர்களை எவ்வகையிலும் ஒடுக்குதல் தகாது."

எவ்வாறயினும் இது ஐரோப்பிய நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கமாகவும் ஆய்வுக்குரிய பொருளாகவும் மாறி விட்டது. கிறிஸ்தவத் திருச்சபைகளுக்குள் கூட, இதனை அங்கீகரிக்க வேண்டும் என்ற போராட்டம் தீவிரமடைந்து வருகிறது "ஒருபால் உறவுத் துறவிகள்" இயக்கம்கூட உள்ளது.

ஒருபால் உறவு பற்றிய ஆய்வுக் கருத்தரங்குகள், மாநாடுகள் ஏராளம் நடைபெறுகின்றன. ஜனவரி 88 இல் அம்ஸ்ரடாம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மூன்று நாள் மாநாட்டில் இந்திய ஆய்வாளர்களும் பங்கேற்றமை, குறிப்பிடத்தக்கது.

ஒருபால் காதலர்களின் ஊர்வலம் மெல்ல மெல்ல சென்று இன்னேர் பெரிய மைதானத்தை அடைந்தது. அங்கு பல்வேறு கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. சஞ்சிகைகள், புகைப்படங்கள், ஓவியங்கள் ......

நீண்ட நடையின் அலுப்புத்தீர தேநீர் அருந்துவதற்காக ஒரு 'பப்' (Pup) பிற்குச் சென்றோம். (ஐரோப்பியரின் கலாசார வாழ்வில், பொழுதுபோக்குகளில் முக்கிய இடம் பெறுபவற்றில் இந்த Pups எனப்படும் சிறு சிறு மது. தேநீர்ச்சாலைகள் அடங்கும்; பல கலைஞர்களது பொழுதுபோக்கிடங்களாகவும் 'வாழ்விடங்களாகவும்' கூட இவை விளங்கியுள்ளன).

மாலை ஐந்து மணிக்கு மேலானது. நாம் தேநீர் அருந்திக் கொண்டிருந்த சாலையில் ஒரே பரபரப்பு; மகிழ்ச்சி ஆரவார ஒலிகள்; கிளாஸ்கள் உரசும் "ச்சியர்ஸ்" சொல்லும் சத்தங்கள். என்னவென விசாரித்தபோது ஐரோப்பிய வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், ஒல்லாந்து சோவியத் யூனியனை வென்றுவிட்டமை தெரிய வந்தது; பாட்டி அப்போது தான் முடிவடைந்திருந்தது.

ஐந்து நிமிடங்களில் சுற்றுப்புறம் இன்னேர் விழாக்கோலம் கொள்ளக் கண்டேன். செம்மஞ்சள் பதாகைகள், பலூன்கள், செம்மஞ்சள் வர்ணத்தை முகத்தில் பூசிய மனிதர்கள்; (ஒல்லாந்து அரச வம்சத்தின் நிறம் செம்மஞ்சளாகும்) மகிழ்ச்சிக் கூக்குரல்கள். அதுவரை டெல்ஃவ்ற் நகரில் விரவியிருந்த ரோஸ் நிறச் சாயை செம்மஞ்சள் வண்ணத்துள் மெல்ல மெல்ல அமிழ்ந்து போயிற்று. □

---

## அவிழ்க்கவேண்டிய சிக்கலுக்குள்

# தானே சிக்குப்பட்டுள்ள பிரேமதாஸ!

*சுதேசி*

இலங்கையில் தொடர்ந்து பதவிக்கு வந்த இனவாத அரசியல் வாதிகளாலும், இறுதியாக ஜே.ஆர். ஆலும் உருவாக்கப்பட்ட சிக்கல்களை அவிழ்க்கும் பொறுப்பு பிரேமதாஸவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் சிக்கலை அவிழ்ப்பதற்குப்பதிலாக, இவரே சிக்கலுக்குள் சிக்குப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களுள், பிரேமதாஸவைப்போல அதிக சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வந்த ஆட்சியாளர் யாரும் இருக்கவில்லை.

இனவாத அரசியலின் பங்குதாரர் என்பதிலிருந்து பிரேமதாஸவையும் நாம் வேறுபடுத்த முடியாது. ஆனல் அது தோற்றுவித்த பிரச்சினையின் உச்சக்கட்டத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய காலகட்டத்தில்தான், இவர் பதவிக்கு வந்துள்ளார் என்பதே கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

பிரேமதாஸ ஒருபுறம், இந்திய அமைதிப்படைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது; மறுபுறம் விடுதலைப் புலிகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதேவேளை இன்னொருபுறம், ஜே.வி.பி. க்கு முகங்கொடுக்க வேண்டியும் ஏனைய எதிர்கட்சிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுமுள்ளது. இவை அனைத்துக்கும் அப்பால், தனது கட்சிக்குள் எழும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இப்போது அவதானிக்க வேண்டிய விடயம் என்னவெனில், இப்பிரச்சினை அனைத்துக்கும் முகங் கொடுக்கக் கூடியளவிற்கு பிரேமதாஸவுக்கு உள்ள பலம்தான் என்ன என்பதே.

பிரேமதாஸவிற்கு கணிசமான அளவு அடிமட்டமக்களின் ஆதரவும் பலமும் இருந்தது. அதாவது கிராமப்புற ஏழைகள் மட்டத்திலும், நகர்ப்புறம் சார்ந்த உதிரிப் பாட்டாளிகள் மட்டத்திலும் அவருக்கு ஆதரவு இருந்தது. இவை அவரது முக்கிய பலமாய் அமைந்தன. ஆனல் தற்போது அவர் ஜே.வி.பியினர் மீது என்று கூறி மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளினல், கிராமப்புற ஆதரவை ஏறக்குறைய முழுவதுமே இழந்துள்ளார். இவருக்கு உதிரித் தொழிலாளர் மத்தியில் ஒரு குழுவாகத் திரண்டு செயற்படும் ஆதரவும் பலமும் இருந்தது. ஆனல், ஜே. வி. பி. யின் ஆயுத அரசியலின் முன்பு அந்தக் குழுத்தன்மை கரைந்துபோய் விட்டது. இத்தகைய குழுக்களை சிலர் "தக்ஸ்" என்று அழைத்ததுமுண்டு. இத்தகைய குழுக்களை பலமாகக் கொண்டு இன்று அரசியல் நடத்தமுடியாது.

அடுத்து நாடாளுமன்றத்துள் இவர் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தாலும், எதிர்க்கட்சிகள் பலம் வாய்ந்த சக்தியாக உள்ளன. அதேவேளை இவரது கட்சிக்குள் இவர்மீது கணிசமான அளவு

(11ஆம் பக்கம் பார்க்க)

# நாடக நெறியாள்கை பற்றி

## நா. சுந்தரலிங்கம்

நா. சுந்தரலிங்கம் சிறந்த நெறியாளரும், நாடகாசிரியரும் நடிகருமாவார். 'விழிப்பு', 'அபசுரம்', 'வழிகாட்டிகள்' என்பன இவர் எழுதிய நாடகங்களாகும். ஆறு நாடகங்கள் எனும் நாடகத் தொகுப்பு நூலில் 'விழிப்பு'ம்: நாடகம் நான்கு எனும் நாடகத் தொகுப்பு நூலில் 'அபசுரமும்' வெளிவந்துள்ளன.

'அபசுரம்', 'இருதுயரங்கள்', 'பம்மாத்து', 'விழிப்பு', 'கடூழியம்', ஆகிய மேடை நாடகங்களை நெறிப்படுத்திய இவர் இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகித்துள்ளார்.

இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழு 1975ஆம் ஆண்டு நடத்திய தேசிய தமிழ் நாடக விழாவிலே, இவரது தயாரிப்பில் உருவான விழிப்பு நாடகம் சிறந்த தயாரிப்பு, சிறந்த நடிகர், சிறந்த பிரதிக்கான விருதுகளைப் பெற்றது.

வானொலி நாடகத் தயாரிப்பாளராகவும் சில காலம் கடமையாற்றியுள்ளார்.

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கல்வியியல் டிப்ளோமா, நாடகம் கற்பித்தலில் டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

யாழ் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகத் தற்போது பணிபுரிவதோடு, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் நாடகமும் அரங்கியலும் கற்பித்தலுக்கான பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரிகிறார்.

### கலைச்சாரல்

### 1. நாடக நெறியாளருக்குரிய தகுதிகள் எவை?

நாடகக் கூறுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அமைதிப்படுத்தி ஓரிடத்தில் மேடையேற்றிக் காட்சிப்படுத்தும் தலையாய பொறுப்பு நெறியாளரைச் சார்ந்ததால், நாடகப் பிரதியை நுணுகிப் பார்க்கும் திறமை, வியாக்கியானிக்கும் பண்பு; நடிகர்களின் சிறப்புத் தன்மைகளையும், பலவீனங்களையும் உளளுணர்ந்து வழிநடத்தும் ஆற்றல்; மேடை இயக்கம் சம்பந்தமான அறிவு: ஒலி, ஒளி பற்றிய ஓரளவு அறிவு, கூட்டு மனப்பான்மையை வளர்த்து, கட்டுப்பாட்டுடன் குழுவை இயக்கும் திறன்; பல்வேறு மேடையமைப்புகள் அவற்றின் தன்மைகள், சாத்தியக் கூறுகள் பற்றிய அறிவு; காட்சியமைப்பு, ஒப்பனை, ஒலி ஒளி நிர்மாணம் பற்றிய பயிற்சி போன்ற தகைமைகள் நெறியாளருக்கு இன்றியமையாதது. இவற்றுடன் கீழைத்தேய, மேலைத்தேய கிராமிய நாடக வகைகள், ஆட்டமுறைமைகள் பற்றிய அறிவு, புலமை இவருக்கிருப்பது மிகவும் அநுகூலமானது.

### 2. நாடக நெறியாளரை நாடக அரங்கின் சர்வாதிகாரி என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும்?

நாடக நெறியாளரை அரங்கின் சர்வாதிகாரியாகப் பார்ப்பது ஒரு பக்கப் பார்வை மட்டுமே. நாடகக்கலை ஒரு கூட்டுக்கலை என்ற அளவில், சர்வாதிகாரத் தன்மை ஒரு அளவுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஒழுங்கும், கட்டுப்பாடும் தம் கடமையையுணர்ந்து செயற்படவும்கூடிய சக பங்காளர்களுள்ள குழுவொன்றுக்குச் சர்வாதிகாரப் பிரச்சினை இருக்க முடியாது. ஆயினும், நாடகம் தொழில்முறையாகவன்றி விருப்பு முறையாக (Ameteur) வுள்ள குழுக்களிலேயே, ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும் அதிகம். கட்டுப்பாடின்மையால்நாடகக்கலை சிதைவுறும் போது, அதை மீட்டெடுக்கச் சர்வாதிகாரத் தன்மை தலையெடுப்பது தவிர்க்க முடியாததாகிறது இச் சர்வாதிகாரத் தன்மை நாடகத்தின் பல்வேறு துறைகளிலும் பரவும் போது. நாடகம் நெறியாளர் ஒருவரின் கற்பனை உருவாக்கமாகவே நிகழத் தொடங்குகிறது. இத் தன்மை ஆரம்பத்தில் வேண்டிய பயனைத் தந்தாலும் தொலை நோக்கில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்; மந்த நிலைக்குக் கொண்டு செல்லும். எனினும், நாடகப் பொறுப்பாளரும் மேடையேற்றுபவரும் நெறியாளர் என்ற வகையில் தனது கடமையைச் செவ்வனே செய்ய, அளவறிந்து சர்வாதிகாரியாக இருப்பது அவசியம்.

### 3. நாடக நெறியாளுகை பற்றிய அடிப்படைத் தத்துவங்களையும் அவை பற்றிய விளக்கங்களையும் சொல்லுவீர்களா?

நாடக நெறியாளருக்கிருக்க வேண்டிய சில தகைமைகளைக் கேள்வி 1 இல் கண்டோம். நெறியாளுகைக்கென்று அடிப்படைத்தத்துவங்கள் இவை தானென்று குறித்துக் கூற முடியாதென்றே எண்ணுகிறேன் உலகபுகழ் பெற்ற நெறியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் செயல்முறைகளையும் படிக்கும்போது ஒவ்வொருவரும் தத்தமது ஆளுமைக்கேற்ப, அறிவறிந்து நாடகங்களை நெறிப்படுத்தியிருப்பதை அறியலாம். இவர்கள் கைக்கொண்ட முறைமைகள் பின்னர் நெறியாள்கைத் தத்துவங்களாகின. ஸ்ரனிஸ்லோவ்ஸ்கி, மேயர்ஹோல்ட், கோடன் கிறெய்க் தொடக்கம் பீற்றர் புறூக் வரை உள்ளவர்களின் நெறியாள்கைப் பண்புகள் இதையே எமக்குக் காட்டுகின்றன. நெறியாளர் சமூகத்தோடு வாழும் உயிரி என்ற வகையில், அவருடைய ஆளுமைவிருத்தி சமூகத்தோடு தொக்கிநிற்பது புலனாகின்றது. இதோடு நெறியாளரது கனிப் பண்பு விருத்தி (Personal Trait) அவரது சமூகப்பார்வையைக் கூர்மைப்படுத்துகிறது. இப்பார்வை விருத்தியடையும் பாங்கிற்கேற்பத் தத்துவங்களும் விளக்கங்களும் வேறுபடும் ஒரு தத்துவம் நெறியாளரின் கற்பனை விருத்தியில் அழுத்தம் வைக்க, மற்றொரு தத்துவம் நடிகரின் அக உருவாக்கததில் அழுத்தம் வைக்கும். ஒரு தத்துவம் பாத்திரத்தின் உளவியற் பண்புகளில் அழுத்தம் வைக்க மற்றொன்று சமூகச் சூற்றுடற் தாக்கங்களில் அழுத்தம் வைக்கும். எனவே, நெறியாள்கைக்குரிய தத்துவங்கள் இவைதானென்று நூல்வடிவில் மேடைக்குக் கொண்டு செல்வது, தவறென்றே கருதுகிறேன் எனினும் நாடகம் ஒரு 'திருஷ்டி காவியம்' என்றஅடிப்படையில் கண்ணுக்கு விருந்தாக மட்டுமன்றி சிந்தைக்கும் விருந்தாக அமைவதே சிறந்தது. இதை நெறியாளர் மனதிலிருத்தல் நல்லது. கண்ணுக்கு விருந்தை நெறியாளர் தேடி அலையும் போது நாடகம் காட்சிக்கலையாக மாறி 'கலை கலைக்காக' என்ற தத்துவத்திற்கு இட்டுச் செல்கிறது. சிந்தைக்கு விருந்தைத் தேடும்போது நாடகம் படிப்படியாக 'பிரசாரக் கலை' யாக மாறுகிறது. இவற்றின் அமைதியை நிலைநாட்ட நெறியாளரின் அறிவும் ஆளுமையும் அவருக்கு உதவ வேண்டும்.

சி. ஜெயசங்கர்
ப. ரகுநாதன்

### 4. மேடைத் தயாரிப்புக்கென ஒரு நாடக எழுத்துருவைத் தெரிவு செய்யும் போது கவனத்திலெடுக்க வேண்டிய விடயங்களெவை ?

I. மேடைக்கு உகந்ததாக நாடகம் அமைவது. அதாவது கண்ணுக்குக் காட்சி விருந்தாக அமைவது. உரையாடலால் நாடகம் காட்சிப்படுத்தப்படாமல் சம்பவங்களாலும் நிகழ்வுகளாலும் காட்சிப்படுத்தப் டும் பண்பு நாடகத்தில் அமைவது. உரையாடல் மிகுந்து நிகழ்வுகள் குறையுமிடத்து நிகழ்வோட்டததை அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளுண்டா எனத் தேடியறிதல்.

II. பாத்திரவார்ப்பு அமையும் முறைமை. ஒரே பாத்திரம் முன்னுக்குப் பின்முரணாக அமைகின்றதா ? பாத்திரங்கள், அவை உப பாத்திரங்களாக (Sub) அமைந்தாலும் சீராக வளர்த்தெடுக்கப்படுகின்றனவா? அவற்றிற்கிடையே அமைதி, இயைபு உண்டா?என்பன போன்றவை.

III. உப முரண்பாடுகள் (Sub Conflicts) முதன்மை முரண்பாட்டுக்கு (Major Conflict) உதவும் முறைமைகள். எவ்வாறு இம் முரண்பாடுகள் நாடகத்தின் நாடகத்தன்மைக்குப் பங்களிக்கின்றன? அவற்றை இன்னும் செம்மையாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டாவெனத் தேடியறிதல்.

IV. ஒலி, ஒளி, காட்சியமைப்பு போன்ற மற்ற நாடகக் கூறுகளுக்கு எழுத்துரு எந்தளவில் இசைந்து கொடுக்கிறது; இசைவு இல்லாவிடத்து எவ்வழியில் இக்கூறுகளை நாடக எழுத்துருவில் வசப்படுத்தலாமென இனங்காண்பது.

V. இவையெல்லாவற்றிற்கும் மேலாக நாடக எழுத்துருவின் மூலமாக வெளிப்படும் செய்தி (Message) – அது எதுவாக இருந்தாலும் (அரசியல், சமூக, உளவியல், அல்லது வெறும் செய்திகள்) – பாத்திரங்கள் மூலமாகவும் சம்பவங்கள் முரண்பாடுகள் மூலமாகவும் செம்மையாக வெளிப்படுத்தப் படுகிறதா ? இல்லாவிடில் இதை எவ்வாறு செய்வது ?

இவை தயாரிப்பு சம்பந்தமான முக்கிய பிரச்சினைகள்; நாடகப் பிரதியைத் தெரிவு செய்யும்போது இவற்றை மனத்திலிருத்தித் தெரிவு செய்யலாம். எனினும், தெரிவு செய்யும் பாங்கு அல்லது முறைமை நெறியாளருக்கு நெறியாளர் வித்தியாசப்படும் என்பதையும், மனதிலிருத்த வேண்டும். ஒரு நாடகப் பிரதியில் இவையெல்லாம் செம்மையாக அமையவேண்டும் என்பதுமில்லை. சில நாடக வகைகள் இவ்வாறான மரபுரீதியான வடிவத்துள் (Conventional form) அடங்காது வெளிநிற்பதும் கண்கூடு. எனவே, நாடகத்தின் வடிவமைப்புக்குத் தக மேற்கூறிய அடிப்படையில் சிந்திக்கலாம்.

### 5. நாடகப் பிரதி கிடைத்தவுடன் நாடகாசிரியருடன் கலந்துரையாடும் விடயங்கள் எவை ?

எந்த நாடகப் பிரதியும் பூரணமான (Perfect) பிரதியாக அமைவதில்லை. நாடகாசிரியரின் ஆளுமை அவரது பிரதியில் பிரதிபலிப்பது வெளிப்படை; தவிர்க்க முடியாதது; அவசியமானது. அரங்கச் செயற்பாடுகளை நன்கறிந்த நாடகாசிரியர் அரங்கத்திற்கேற்ற முறையில் நாடகத்தை அமைப்பார். அவ்வாறான பிரதியில் அதிக பிரச்சினை இருக்க இடமில்லை. மேடைப் பிரக்ஞையோடு எழுதப்படாத பிரதிகளே மேடையேற்றத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. எனவே, பிரதி கிடைத்ததும் அதை மூன்று அல்லது நான்கு முறை திரும்பத் திரும்ப வாசித்து, நாடகத்தின் உட்கருத்தையும் நாடகாசிரியனின் நோக்கத்தையும் நன்கு குறித்தபின், மேடையில் அந்நாடகம் அமையும் முறைமை, அமையப் போகும் முறைமை ஆகியவற்றை அனுமானிக்க வேண்டும். இந்நிலையில் நாடகாசிரியனின் ஆளுமையோடு நெறியாளரின் ஆளுமையும் சேர்ந்து தொழிற்படுகிறது. இச்சேர்க்கையின் போது இசைவும் முரண்பாடும் தோன்றுவது இயற்கை. முரண்பாடுகளுக்குத் தக நாடகாசிரியரோடு கலந்துரையாடி. வேண்டிய மாற்றங்களை முதலிலேயே செய்து கொள்வது நல்லது.

### 6. தனக்கு அறிமுகமில்லாத நடிகர்களை வைத்து நாடகத்தை நெறிப்படுத்துபவர். முதற் சந்திப்பில் அவர்களுடன் கலந்துரையாடக் கூடிய விடயங்கள் எவை?

அறிமுகமில்லாதவர்கள் முதன்முறை கூடும்போது அமைதியும், கூச்சமும் தான் கூடுதலாக இருக்கும். இதை முதலில் போக்க வேண்டும். இதற்கு முதலில் ஆளை ஆள் அறிமுகஞ்செய்து வைக்கச் சந்தர்ப்பம் அளித்து பின்னர் Improvised சம்பாஷணைகளை உருவாக்கலாம். உதாரணம்: தமது நாடக முயற்சிகளின் போது மகிழ்ச்சியும், சிரிப்பும், துக்கமும் ஏற்படுத்திய சில நிகழ்வுகளை எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் அளிக்கலாம். நாடகப் பண்புள்ள இந் நிகழ்ச்சிகளை மீளச் செய்யச் சந்தர்ப்பமளிக்கலாம். இவ்வாறு ஓரிரு சந்திப்புக்கள் அமைவது நல்லது. பின்னர் நாடகத்தில் வரும் சம்பவங்களை Improvised ஆக தம்மிச்சைப்படியே தனித்தனியாகவோ குழுக்களாகவோ செய்யவிடலாம். எடுத்த எடுப்பிலேயே நெறியாளரென்ற தோரணையில் போதனை செய்வதைத் தவிர்த்தல் நல்லது. இவ்வாறு ஒரு கிழமை அல்லது இரு கிழமை போனதும், நாடகப்பிரதியையும் நாடகத்தையும் முறையாக (Formal) அறிமுகஞ் செய்யலாம்.

### 7. ஒரு நாடகத்தின் தயாரிப்புக்கென முதல் வாசிப்புத் தொடங்கி அதன் இறுதி ஒத்திகை வரை நீங்கள் கையாளும் படிமுறைகள் எவை?

(i) முதல் வாசிப்பு (நெறியாளரால் வாசிக்கப்படுவது நல்லது).

(ii) நாடகம் பற்றியும், பாத்திரங்கள் பற்றியும் உரையாடல்—நெறியாளரின் எதிர்பார்ப்புகள்.

(iii) பாத்திரங்களைத் தாங்கத் தெரிவுக்கு வருவோர் மாறி மாறி வாசித்தல்.

(iv) பாத்திரத் தெரிவு (தற்காலிகம்).

(v) பாத்திரங்களைத் தாங்கி மேலும் வாசித்தல்: பாவங்கள், அழுத்தங்கள் கொடுத்து வாசித்தல்.

(vi) தம்மிச்சையான அசைவுடன் வாசித்தல்.

(vii) நடந்தும் நின்றும், ஏறியும் இறங்கியும், நடையின் வேகத்தைக் கூட்டியும் குறைத்

(9ஆம் பக்கம் பார்க்க)

## கடவுளே காப்பாற்றும!

என்கையிற் பேனு
இருந்தென்ன புண்ணியம்...?
உன்கையிற் துப்பாக்கி
இருக்கிறதா, நீ பெரியோன்.

கொட்டாவி வருகிறதா....
கூசாமல் திறவாயை.
முட்டாளே, மற்றப்படி
மூடு!....ஏன் வீண்தொல்லை!
வாயநமக்கு வாய்த்ததெல்லாம்
வயிற்றை நிரப்புதற்கே!
நாய்பெற்ற சுதந்திரம்,
நமக்கு ஏன்காணும....?

பிணக்காட்சி பார்த்திருப்பீர்,
கையிரண்டும் பிணைத்தபடி
மனச்சாட்சி என்கின்ற
மடக்கதைகள் வேண்டாமே!

முந்தித் தான்உந்த
மூளைச் சுதந்திரங்கள்....
சிந்தித்தால் சாவுவரும்
சீ! வேண்டாம் சலவைசெய்!

உனது மரணத்தை
நீ விலைக்கு வேண்டுவையேல்
மனித உரிமை என்றெல்லாம்
மன்றேறிப் பேசிவா!

இன்னோர் ஆள் உனக்குள்ளே
இருந்திடவும் கூடும்! அதால்
உன்சொந்தக் கருத்துகளை
உனக்கேனும் சொல்லாதே!

முட்டையை உடைப்பதற்கும்
முகஞ்சுழித்த மக்களிடம்
மொட்டைகளும் குட்டைகளும்
முட்டிவிட்ட பைசாசம்
முகில்வரையும் வளர்ந்தெழும்பி
முழிஉருட்டிப் பார்க்கிறது.
திகில் உறைந்து சனங்களெல்லாம்
துயில் மறந்து தவிக்கின்றூர்.

என்னமாய் ஓர் காலம்
இருந்த பூமியிது....
சின்னதோர் இத்தீவு
சீரழிந்து போனதுவே...!

தர்மிஷ்டம் இம்மண்ணை ஓர்
தசாப்தம ஆண்டதினுல்
கர்மத்தை அனுபவிக்கிறோம்,
கடவுளே, காப்பாறறும்!

— எஸ். ஜி. கணேசவேல் □

## விழித்தெழுதல்

இருட்டு;
என் இருப்புக் கூட்டுக்குள்.

இருண்ட கூட்டுக்குள்
வெளிச்சத்தைப் பாய்ச்ச
மின்மினிகளைத்
தூக்கிப் போகிறது
தூக்கணாங் குருவி....

நானும் போகிறேன்;
சூர்யனைத் தூக்க!

— ஈழக்கவி □

## புறக்கணிப்பும் இகழ்நகையும்


இப்படியாக முற்றிற்று.
நல்லதுதான்....
உன்னுடைய புறக்கணிப்பும்
இகழ்நகையும்
ஒருவகையில் எனது பிரமாண்டத்தைத்
தேடவைத்தது
இன்று, எதுவித சலனமுமில்லை
வழமையாகக் கடந்துபோகும்
சதைப்பிண்டங்களைப் போல
உன்னையும் கடக்கும்
மனவலிமையைக் கொடுத்தது
எந்தப் போலிக்குள்ளும் தலைசாய்க்காது
என்னிருப்பே முக்கியமாய் தேடவைத்தது.
மிகவும் நன்றி.
போய்வா, பிரிய நண்பி.

— அசோக் □

# போர் ஓவியங்கள்

### பிக்காசோ
(Pablo - Picasso. 1881-1973)

குவர்னிக்கா ( Guernica ) என்ற தனது விமானத் தாக்கல்[1] ஓவியத்தில் விமானங்களையோ, புகைமண்டலத்தையோ, எரியும் நகரத்தையோ இவர் காட்டவில்லை. மாறாக 5 மனிதர்களையும் 2 விலங்குகளையும் மட்டுமே தீட்டி உள்ளார். ஆயினும் ஒரு பௌதிகத் தாக்கத்தை உண்டாக்கக் கூடியதாகவும், அதனுல் பீதியுறும் எமது கண்களுக்கு அதிர்வு, தடுமாற்றம், உதறல் எனும் உணர்வுகளை உண்டாக்க வல்லதாகவும் அது உள்ளது. முப்பரிமாண வாழ்க்கையினை இரு பரிமாண பிரதியீடாக பிரமாண்ட வடிவில் கன்வசில் வரையப்பட்டுள்ளது. வலப்புற எல்லையில் வாய் பிளந்தபடி ஆகாயத்தை நோக்கிய கைகளுடன் ஒருவன். அவன் பின்புறம் திரும்பி இருக்கும் கோணம் சாதாரண நிலைகளில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று. அவனுக்கு முன் முக்கோண வடிவில் உருவங்கள். அவை தீப்பிழம்புகள் ஆக இருக்கலாம். முடிவற்ற கதறலுடன் கையில் இறந்த பிள்ளையுடன் ஓர் பெண் இட எல்லைப் புறத்தில். இன்னும் ஒரு பெண் விமானத் தாக்குதலில் இருந்து தப்பிவிட வேண்டும் என்ற மனநிலையில் ஓடுகிறுள். கனவுகளில் மட்டுமே இது போன்ற ஓர் உருவத்தைக் காணமுடியும் (இவ்வகைச் சம்பவங்கள் கனவுகள் போன்றதாயினும் நிஜத்திலும் நடந்து விடுகிறது). தன்னிடமிருந்து கூட விடுபட்டு விடவேண்டும் என்ற எண்ணத்துடன், அவள் பிரயத்தனத்தோடும் வேகத்துடனும் ஓடுகிறுள். உருக்குலைந்த நிலையில் ஓர் மனித உடல். அதன் கையிலொன்று தாக்கிய அயுதத்தின் ஒரு பகுதியைப் பிடித்தபடி உள்ளது. பிரமாண்டமானகுதிரைஒன்று காயப்பட்டு அலறியபடி உள்ளது. உணர்ச்சி ததும்பும் தலை ஒன்றும், வெறி கொண்ட சண்டையிடும் மாடு ஒன்றும், (இவை ஸ்பானியர்களின் மரணம் பற்றிய குறியீடு). இவ் அமைப்புக்கு மேலே ஓவியத்தின் நடுப்பகுதியில் கையில் விளக்குடன் ஓர் முகம். நிலையான பார்வை உடைய இம் முகம் ஆழ்ந்த துக்கத்துடனும் அமைதியற்றும் காணப்படுகிறது. வேறு ஒரு பார்வையில் புத்தி சுவாதீனமற்றது போல் தோன்றுகின்றது. துன்ப உணர்வுகளைத் தரும் கறுப்பு, பளிச்சிடும் வெள்ளை, சாம்பல் என்பன வர்ணங்கள்.



பிக்காசோவின் குவர்னிக்கா ஓவியம்

### கோயா
(Francisoco Goya 1746 – 1828)

இவரது மே - 3 - 1808 அன்று நடந்த அனர்த்தம்[2] என்ற ஓவியம் ஓர் ஸ்பானிய புற நகரத்தின் பள்ளத் தாக்கில் நடந்த யுத்தத்தின் பிரதிபலிப்பாகும். வேறு துணையற்ற முரட்டு மனிதர்கள் இடப்புறக்கில். அதில் ஒருவன் கருணையை எதிர் பார்த்து கைகளை மேலே தூக்கிய நிலையில் வரையப்பட்டுள்ளான். சிறிது தூரத்தில் கனமான சீருடை தரித்த சிப்பாய்கள். நீட்டப்பட்ட துப்பாக்கிகள்

கில்பேட் கையிட்
தமிழில்:
சு. மகேந்திரன்

அவர்களின் முகங்களை மறைத்துள்ளன நடுப்பகுதியில் பல குடிமக்கள் முகத்தைக் கையால் மூடியபடி, அவர்களின் பக்கத்தில் பல உடல்கள் தரையில் விழுந்து கிடக்கின்றன.

### காலோட்
(Jacques Callot. 1597–1635)

இவர் யுத்தமும் துரதிஷ்டமும்[3] என்ற ஓவியத்தில் ஒரு கிராமம் சூறையாடப்படும் விதத்தை சித்திரிக்கிறுர். பிக்காசோவின் பிரமாண்ட ஓவியம் போன்றோ, 8 X 11 அளவுகொண்ட கோயாவின் ஓவியம் போன்றதோ அல்ல; ஒரு மனிதன் தலை அளவானதே இது. கிராமம் முழுவதும் தேவாலயத்தில். தேவாலயமும் குடிசைகளும் எரிகின்றன. படத்தின் நடுவில் ஒரு வண்டி. அதன் பக்கத்தில் ஒரு குதிரை. மதுச்சாடிகளைப் போர் வீரர்கள் வண்டியிலிருந்து இறக்குகிறுர்கள். சில வீரர்கள் தேவாலயத்தை நோக்கிச் சுடுகிறுர்கள். மற்றும் சிலர் பெண்களைத் தலை மயிரில் பிடித்திழுக்கிறுர்கள். தேவாலயத்தின் படிக்கட்டில் நின்று குடியானவர்களும் திருப்பிச் சுடுகிறுர்கள்.

இம்மூன்று ஓவியங்களும் ஒரே வகை உணர்வுகளைத் தந்தாலும் வரையப்பட்ட காலங்கட்கு அமைய, அவற்றின் கலை வடிவம் வெவ்வேறுனதாகும். எமது சமகாலத்தவரான பிக்காசோ 20 ஆம் நூற்றுண்டின் கலை பற்றிய புதிய கோணங்களைப் பின்பற்றி உள்ளார். தொடர் விமானத் தாக்குதலை உருவங்களால் பிரதிபடுத்தி உள்ளார். தனித்தும், பிரிந்தும் நிற்கக் கூடிய காலத்தவரான அவரின் ஓவியம் மிகுந்த தனித்துவம் பெற்றது. உணர்வுகளும், புரட்சியும் மிகுந்த காலத்தில் வாழ்ந்த கோயா உண்மை நிலையைக் கற்பனைச் சாகசங்கள் கலந்து வெளிக்காட்டி உள்ளார். எனினும் நேரடிச் சாடசிபோல் ஓவியம் உள்ளது காலோட் அதிகார ஆட்சிக் காலத்தவராக இருந்தும் கூட இயலுமான அளவு உணர்வை வெளிப்படுத்தி உள்ளார். ஒப்புரவான ஓவியராக இருந்தமையால் சம்பவம் முழுவதும் படத்தில் உள்ளது. இதுவே அவரது காலத்தைய முறையாக இருந்தது. , எனினும் மூவரும் வேறு காலத்தவராக, வித்தியாசமான கலை அணுகுமுறை வாய்க்கப் பெற்றவராயினும் போரின் வெறித்தனமான செயற்பாட்டைக் கோடிட்டுக் காட்டி உள்ளனர். இவ்வகையில் மூவரது செயற்பாடுகளும் பெறுமதி வாய்ந்தவை,

குறிப்புகள்:

1 பிராங்கோ என்ற சர்வாதிகாரியால் நாஸிப் படைகளைக் கொண்டு ஸ்பெயினில் நடத்தப்பட்ட உலகின் முதல் விமானத் தொடர் தாக்குதல்.

2. நெப்போலியனின், யுத்தம் ஒன்று.

3. மத யுத்தங்கள். □

## பிள்ளையார் வேண்டும்

பிள்ளையார் பிடித்தோம்
குரங்குகள்தான் வந்தன.
இப்பொழுது;
குரங்குகள்தான் பிடிக்கின்றோம்
ஏனென்றால்;
எங்களுக்கு ஒரு
பிள்ளையார் வேண்டும்.

— நெடுந்தீவு மகேஷ் □

**திசை** THISAI சிறுகதைப் போட்டி 2ஆம் பரிசுக் கதை

# மையித்துக்கள் துயில்கின்றன

மரண இடி ஒன்று தலையில் வந்து விழுந்தது.

''என்ன மாமி சொல்றீங்க?'' — அசன் மாமியைப் பார்த்து ஷர்மிலா கேட்டாள், அதிர்ச்சியுடன்.

''ஓம், புள்ள. ஒன்ற வாப்பா தேங்காக் கடயில மயங்கிஉழுந்துட்டாம். கொண்டுவாருங்க!''

அதன்பின் மாமி சொன்ன வாசகம் ஒன்றும் ஷர்மிலாவின் காதில் விழவில்லை.

இதயத்தினுள்ளே இருந்து பீறிட்டு வெளியேறிய விம்மலைத் துணைக்கழைத்துக் கொண்டு, கரி அப்பிய அழுக்குச் சீலையைக் கூடக் கலையாமல், ஒரே ஓட்டமாக உம்மா வீட்டை நோக்கி ஓடினாள்.

வாப்பாவைச் சிலர் காரிலிருந்து இறக்கினார்கள் பிணமாகத்தான்! வீட்டுக்குள் கொண்டுவந்து அங்கே ஆண்டாண்டுக் காலமாக இருந்துவந்த பழைய சாக்குக் கட்டிலில் கிடத்தினார்கள்.

□ கலைவாதி கலீல் □

உம்மாவின் ஒப்பாரியினால் வீடே கிடுகிடுத்தது. பல நாட்களாக ஓடாகிப் போயிருந்த உடலும், எலும்பு துருத்திக் கொண்டிருந்த அதேவேளை அமைதியும் சாந்தமும் தவழும் அந்த முகமும் ஷெய்னம்பு நாச்சியாவுக்குப் பழக்கமானதுதான். என்றாலும் உயிரற்ற ஜடமாகக் கிடக்கும் கணவரைப் பார்த்ததும் ஈரலைப் பிய்த்து எடுப்பதைப் போலிருந்தது. சாதாரணமாகவே வாயைத்திறக்காமல் மௌனமாய் அழும் அவள், வாயைப் பெரிதாய்த் திறந்து அலறினாள்.

''என்ற ராசா!... ... எங்களையெல்லாம் உட்டுட்டுப் போயிட்டீங்களே! ... ... இனி நாங்க யாரை நம்பி வாழப் போறோம்? ... ... ... எப்படி வாழப் போறோம், என்ற ராசா!......... எப்படி வாழப் போறோம்!......''

சகாப்தீன் காக்காவின் கால்மாட்டில் விழுந்து அவரது கால்களை இறுகப் பற்றி அவற்றைக் கண்ணீரால் குளிப்பாட்டியபடி அழுதாள் மனைவி ஷெய்ணம்பு.

''வாப்பா! ... ... ... என் செல்ல வாப்பா! ......போயிட்டீங்களே, வாப்பா!...... எங்களையெல்லாம் உட்டுட்டுப் போயிட்டீங்களே, வாப்பா! ... ... எங்களை நல்லா வாழ வைக்கிறதுக்காகவும் எங்களைப் படிப்பிச்சுப் பெரியாளா ஆக்கிறதுக்காகவும் நீங்கபட்ட கஷ்டங்கள் ஒண்ணு ரெண்டா வாப்பா! ...... அந்தக் கஷ்டத்துலதானே, வாப்பா, ஓங்க றூஹூவும் போயிட்டுது!...''

தலைவிரி கோலமாக வீட்டுக்குள் நுழைந்த ஷர்மிலா வாப்பாவின் மேல் விழுந்து விழுந்து புரண்டபடி அழுதாள். முகத்தோடு முகம் புதைத்துக் கண்ணீரால் குளிப்பாட்டினாள். பக்கத்திலிருந்த பெண்கள் அவளைப் பிடித்துப் பலவந்தமாகப் பிரித்து வைத்தனர்.

வாப்பா மீது அளவுக்கு மீறிய பாசமும் பரிவும் காட்டியவள் அவளல்லவா! அதுபோலவே சகாப்தீன் காக்காவுக்கும் இத்தனைக் குழந்தைகளையும்விட ஷர்மிலா மீது ஒரு தனி அன்புதான் ....

'பெஞ்ச்' ஒன்றின்மீது கிடத்தப்பட்டிருந்த சகாப்தீன் காக்காவின் மையித்தைச் சுற்றி நின்று அவரது பிள்ளைகள் அழுது கொண்டிருந்தார்கள், தலைமாட்டின் அருகில் ஷர்மிலாவின் உம்மா அமர்ந்திருந்தாள். அழுது அழுது அவள கண்கள் கொவ்வைப் பழமாகி விட்டிருந்தன.

ஷர்மிலாவோடு அவளது தங்கைமார்களான பல்கீஸ், நஸீரா, கடைக்குட்டி ஷீனத்தும், தம்பிமார்களான நஸீர், ஜலீல் ஆகியோரும் கலங்கிய கண்களுடன் காணப்பட்டனர்.

மையித்து கழுத்துவரை போர்த்தப்பட்டிருந்தது. பழைய வெள்ளைத்துணி அதற்குப் பயன்பட்டது. பலநாட்களாக 'ஷேவ்' எடுக்காத முகம் என்றாலும் அதில் ஒரு விதப் பிரகாசம் இருந்தது. மெலிந்து கன்னத்தில் துருத்திய எலும்புகளுடன் குழிவிழுந்து தோற்றமளித்த கண்கள் மூடப்பட்டிருந்தாலும் முகத்தின் தேஜசுக்குக் குறைவில்லாமல் இருந்தது. இதழ்க் கடையில் மெலிதான புன்னகையொன்று இழையோடியது. அவரது முகத்தைப் பார்க்கும்போது ஒரு பத்துப் பதினைந்து வயது குறைத்து மதிப்பிடலாம் போல் தெரிந்தது.

அவர் மௌத்தான விதத்தை வெளியில் யாரோ விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

''நெஞ்சு வலிக்கிறதேயென்று தேங்காய்க் குவியலில் சாய்ந்தவர்தான்! பொறவு எழுந்திருக்கவேயில்லே! . ...''

இது ஷெய்ணம்புவின் காதில் விழுந்திருக்க வேண்டும். அவள், ஓய்ந்திருந்த மழை மீண்டும் 'சோ' வென்று பொழிவது போல் வாய்விட்டு அழுதாள். ஷர்மிலாவும் சேர்ந்தழுதாள்.

அந்தப் பழைய ஓலைக்குடிசைக்கு வெளியே சனங்கள் கூடிவிட்டார்கள். மன்னார்க் குடியிருப்பில் மையித்தை அதிக நேரம் வைத்திருக்க மாட்டார்கள். 'சூடு ஆறுவதற்கு முன்னரே எடுத்துவிட வேண்டும்', என்று சொல்பவர்களும் உண்டு. மிக நெருங்கிய உறவினர்கள் வரும்வரை பார்த்திருப்பதும் வழக்கம். சகாப்தீன் காக்காவுக்கு யார் இருக்கிறார்கள் நெருங்கிய உறவினர்கள்– என்று சொல்லிக் கொள்ள, அவரது மருமகனைத் தவிர?

குடியிருப்புப் பெரிய பள்ளி கதீப் 'கறுத்த லெப்பை'யும் வந்து விட்டார். 'கபன்' கட்டுவதில் அவர் கை தேர்ந்தவர். இந்த விசயத்தில் யாரும் அவரை மிஞ்சிவிட முடியாது. அவருக்குத் துணையாக சபீக் மாஸ்டர், சமீபு மாஸ்டர் எல்லாரும் வந்து விட்டார்கள். குளிப்பாட்டும் சடங்கை அவர்கள் கச்சிதமாகச் செய்து விடுவார்கள்.

மையித்தின் தலைமாட்டில் ஒரு சாம்பிராணிச் சட்டி புகைந்து கொண்டிருந்தது. அதில் சாம்பிராணியை அடிக்கடி அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள் ஷர்மிலா. தலைமாட்டிலும் கால்மாட்டிலும் ஊதுவத்தி எரிந்து புகைந்து கொண்டிருந்தது. அந்தச் சிறிய அறையோ சாம்பிராணி, ஊதுவத்தி மணம் கமழக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஷர்மிலா, உம்மாவைப் பார்த்தாள். அவளது கண்களின் மேலிமைக்கும் கீழிமைக்கும் இடையே மெல்லிய சிலந்திப் பின்னலாக மறைந்திருந்த கண்ணாடித் திரையைத் தன் இரு விரல்களினால் துடைத்துக் கொண்டு அவள் உம்மாவைப் பார்த்தாள்.

உம்மா குனிந்த தலை நிமிராமலிருந்து அழுது கொண்டிருந்தாள்.

'இனி உம்மாவுக்கு யார் துணை? ஒரு பெண்ணுக்குப் புருஷனை விடப் பெரிய துணை வேறு ஏதும் இருக்கிறதா? அதுவும் எனது வாப்பாவை விட, ஓர் ஏக பத்தினி விரதர்? ... ... இனிச் சதா காலமும் குனிந்த தலையுடன்தான் வாழ வேண்டுமா? ... உம்மா, பிள்ளைகள் என்று ....நாங்கள் எல்லாம் இருந்துதான் உம்மாவுக்கு என்ன பயன? ...... பாவம் உம்மா! .....'

ஷர்மிலாவின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்தார்கள்.

வெளியே பலரின் உரையாடல். சகாப்தீன் காக்காவைப் பற்றியதுதான்.

''பெரிய நாணயஸ்தன்!...... ஒரு அஞ்சி சதம் கூட யாரிட்டயும் கைநீட்டிக் கடனுக் கேட்டதில்ல!......''–இது றஸீது மாஸ்டர்.

''யாரிட்டயும் எந்த வம்பு தும்புக்கும் போறதில்லே! தானுண்டு, தன் பாடுண்டுன்னு இருந்தவரு—இது அப்துல் காதர் ஹாஜியார்.

''சரியான ரோசக்காரரு! தன்மானம் உள்ளவரு!...... எப்பிடியோ குழந்தைகளை வளத்து ஆளாக்கிப் போட்டாரு!...... ஒரு செம்புச் சல்லிகூட கடனில்ல!......'' என்றார் மம்மது மரைக்கார்.

''எவரஸ்ட் ஒட்டல்'' முதலாளி ஜலால்தீன் இவ்வாறு சொன்னார்: ''ஒரு மொறை மழை கடுமயா இருந்திச்சின்னு என் கடைத் தாழ்வாரத்திலே ஒதுங்கினாரு. கன நேரம் ஆயிடுச்சேன்னு ஒரு டீ குடுத்தேன். குடிக்க மாட்டேன்னுட்டாரு! இப்ப இதை வாங்கிக் குடிச்சா அடிக்கடி அந்த எண்ணம் ஏற்படும், அதுனால வேணாம்னுட்டாரு! .....''

இவர்களது உரையாடல் ஷர்மிலாவுக்கு மெதுவாகக் கேட்டது. குமுறிக் குமுறிக் கதறினாள்.

மையித்து குளிப்பாட்டப்படுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டது. அதனைப் பலர் சேர்ந்து தூக்கும்போது ஷர்மிலாவும் உம்மாவும் வாய் திறந்து அலறினர். தங்கைமார்களும்தான்.

குளிப்பாட்டப்பட்ட மையித்து கபன் இடப்பட்டது. கறுத்த லெப்பை அந்த வேலையை மிகக் கச்சிதமாகச் செய்தார். ஷெய்ணம்பு நாச்சியாவின் பணத்தில் வாங்கப்பட்ட அந்தக் கபன் சீலையினால் சகாப்தீன் காக்காவின் உடல் சுற்றப்பட்டது.

''இறுதி முறையாக எல்லாரும் பார்த்துக் கொள்ளுங்கள் ......'' என்று கறுத்த லெப்பை கட்டளை இட்டதுதான் தாமதம், ஒப்பாரியும் 'ஓசைக்குர'லும் வானை எட்டின.



ஒருத்தர்மேல் ஒருத்தர் புரண்டு கொண்டு, முண்டியடித்தபடி மையித்தின் மேல் விழுந்த ஷெய்ணம்புவையும் ஷர்மிலாவையும் மையித்திலிருந்து பிரித்தெடுப்பது பெரும் பாடாகிவிட்டது. பல்கீஸ், நஸீரா, ஷீனத், நஸீர், ஜலீல் ஆகியோரும் விம்மி விம்மி அழுதுகொண்டு நின்றனர்.

சகாப்தீன் காக்காவின் முகத்தை மூடுமுன் சந்தனம், பலமணம், பன்னீர் எல்லாம் கலந்து தேங்காய்ப்பூப்போல் ஆக்கப்பட்டிருந்த தூளைத் தூவினார் கறுத்த லெப்பை. வேறு சிலரும் முகத்தின் அருகில் அள்ளிப் போட்டார்கள். முகம் மூடப்பட்டது; கபன் கட்டப்பட்டுத் தலையில் முடிச்சிடப் பட்டது.

இனி, மையித்து சந்தூக்கில் ஏற வேண்டியது மட்டும் தான். அது தானாகே ஏறாது. பலர் சேர்ந்து ஏற்ற வேண்டும். முஸ்லிம்களின் இறுதி ஊர்வலச் சடங்கின் எளிமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்த அந்த சந்தூக்கும் வாசலில் காத்திருந்தது.

எல்லா மையித்துக்கும் சொந்தமான இந்தப் பள்ளிவாசல் சொத்தை இங்குள்ளார் ''பள்ளிவாசல் கரத்தை'' என்றும் சொல்வார்கள். பள்ளிக்கரத்தை இப்போது தயார். அதில் பயணம் செய்வதற்கு மையித்தும் தயார்.

நான்கைந்து பேர் சேர்ந்து பெண்களின் அழுகை ஓலத்தையும் பொருட் படுத்தாமல், மையித்தைத் தூக்க முயன்றனர்.

''கொஞ்சம் பொறுங்க, தம்பிகளா! .....''

மையித்தைத் தூக்கும் முயற்சியை விட்டுவிட்டுச் சத்தம் வந்த திக்கில் திரும்பினார்கள் அவர்கள். ஊர் மரைக்கார் அப்துல் ஹமீது எதிரே.

'ஏன்?' என்பதுபோல் அவர் மீது பார்வையைப் பாய்ச்சினர்.

''புள்ள ஷர்மிலா!...... இங்க வா புள்ள!... ...''

அப்துல் ஹமீதுதான் கூப்பிட்டார் ஷர்மிலாவை. அவள் வியப்புடன் அருகில் சென்றாள். மரைக்காரின் முகத்தைப் பார்த்தாள். அவரது முகம் சலனமற்று இறுக்கமாக இருந்தது. அவர் தயங்கித் தயங்கிக் கூறினார்: ''புள்ள, ஷர்மிலா!...... பொலேயா நெனச்சுக் கொள்ளாத. ...... ஒன்ற வாப்பா... பள்ளி வாசல் காசு பாக்கி வச்சிருக்கு, புள்ளே.....''

(9ஆம் பக்கம் பார்க்க)

## நாடக...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும், இருந்தும் படுத்தும் வாசித்தல்.

(viii) நாடகக் கட்டங்களை Improvised ஆகச் செய்தல்.

(ix) நெறியாளர் வகுத்த அசைவுகளோடு வசனங்களைப் பேசி அசைதல்.

(x) இசைக்கும் தாளத்திற்கு மேற்ப அசைதல்.

(xi) பாத்திர உருவாக்கம்; புற உருவாக்கம்; அசைவு.

(xii) பாத்திர உருவாக்கம்: அகம், புறம், அசைவு—உரையாடலுடன்.

(xiii) கட்டம் கட்டமாக நாடகம் நடித்தல்-மேடைப் பொருட்களுடன்.

(xiv) முழுமையான நாடகம் சகல மேடைப்பொருட்களுடனும்- இசை வசதியாயின்.

(xv) உடை அணிகலன்களோடு நடித்தல், இசையைச் சேர்த்தல்.

(xvi) இசை, ஒளியுடன் கூடிய ஒத்திகை.

*8. இலங்கையின் தமிழ்ப் பாரம்பரியக் கூத்துகளின் ஆட்டங்களையும், பாடல்களையும் துணைக்கொண்டு மோடி (Stylised) முறையான நாடகமொன்றை நெறிப்படுத்துபவர் அறிந்திருகக வேண்டிய விடயங்கள் எவை?*

i. பல்வேறு கூத்து வடிவங்களின் ஆட்டமுறைகளையும்; பாடல், இசை, வாத்தியக் கருவிகளாகியவற்றின் முறைமைகளையும் பற்றிய அறிவு.

ii. ஏதாவதொரு நாட்டுக் கூத்தின் ஆட்டமுறைமையிலும், இசை முறைமையிலும் புலமை.

iii ஏதாவதொரு வாத்தியக் கருவியை மீட்டுவதில் புலமை.

iv. மேலைத்தேய நாடகங்களிலும் கீழைத்தேய நாடகங்களிலும் புலமை; அரங்க அறிவு.

v. மேலைத்தேய ஆட்டமுறை, இசை ஆகியன பற்றிய அறிவு. ஆனால், இது அத்தியாவசியமில்லை.

vi. கூத்துகளின் ஆடுகளரி பற்றிய அறிவு.

vii. கிழக்காசிய மோடி நாடகங்கள் பற்றிய அறிவு.

இவற்றை ஒரு நெறியாளர் அறிந்திருப்பாராயின், தனது கற்பனை உருவாக்கத்திற்கேற்ப பாரம்பரியக் கூத்து முறைகளை ஒரு நாடகத்தில் கையாளுவது சுலபமாகிறது. இவற்றில் பரிச்சயம் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு அண்ணாவியாரையோ, அல்லது ஒரு ஆட்ட நிபுணரையோ உதவிக்கு வைத்துக் கொள்வது நல்லது.

*9. நெறியாளன் தான் நெறிப்படுத்தும் நாடகத்தில் நடிப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

உலகப் புகழ்பெற்ற பல நெறியாளர்கள் தம் நாடகங்களிலயே நடித்துப் புகழ் பெற்றிருக்கிறார்கள். நாடக உருவாக்கம், பயிற்சி நெறியாக வளர்ந்துள்ள இந்நாடுகளில் இது பிரச்சினைகள் எவற்றையும் தோற்றுவிக்காது. ஒரு குறிப்பிட்ட செயல் நெறியில் நாடகம் உருவாகும். ஆனால், பயிற்சி எதுவுமில்லாத, அல்லது அரைகுறைப் பயிற்சியையுடைய அமெச்சூர் நடிகர்களைக் கொண்டு நாடகம் பயிலும் போது, ஒவ்வொரு துறையிலும் நெறியாளரது தலையீடும் கண்காணிப்பும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, அவரது வேலைப்பழு அதிகரிக்கப்படுவதால் தன்னை நடிப்புத் துறையிலிருந்து விடுவித்துக் கொள்வது நல்லது. எமது சூழலில் நெறியாளரும் ஒரு பயில்முறைப் பங்காளியாக இருப்பதால், அவர் முழுமையாகவே நெறியாள்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது நல்லது. நாடகத்தை முழுமையாக மேடையில் பார்த்து வேண்டிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு, இது உதவியாக இருக்கும். ஆனால், ஒரு நெறியாளர் நாடக பாத்திரமொன்றை ஏற்று நடிப்பதில் தவறேதுமில்லை.

*10. நாடக விமர்சனம் செயபவர்கள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் எவையென்று கூறுவீர்களா?*

இலக்கியத் துறைகளில் எமது விமர்சனக்கலை வளர்ந்துள்ளதுபோல் அரங்க அளிக்கைக் கலைகளில் வளரவில்லை என்பது, கண்கூடு. இலக்கிய விமர்சனங்களைச் செய்பவரே பெரும்பாலும் அளிக்கைக்கலைகளையும் விமர்சிக்கிறார்கள். அளிக்கைக் கலைகளுக்கு இவர்கள் பிரயோகிக்கும் Standards or Norms, அதாவது அளவுகோல்கள் பெரும்பாலும் இலக்கியங்களுக்கு இவர்கள் பயன்படுத்தும் Norms ஆகவே அமைகின்றன. இவற்றிற்குப் புறநடையாக உள்ள விமர்சனங்களும் உண்டு. அவ்வாறான விமர்சனங்களை உற்று நோக்குமிடத்து, இவை நாடகத் துறையில் பரிச்சயமுள்ள விமர்சகர்களாற் செய்யப்பட்ட விமர்சனங்களாக இருப்பதையும் காணலாம். ஆனால் இவைகூட, முறையாக வார்த்தெடுக்கப்படவில்லை. ஒரு இசைக் கச்சேரியை இரசிப்பதும, இரசனையை வெளிப்படுத்துவதும்; ஒரு பரத நாட்டிய நிகழ்ச்சியை இரசிப்பதும் இரசனையை வெளிப்படுத்துவதும் வெவ்வேறான செயல்கள். ஏனெனில் இங்கு அளிக்கைகளின் தன்மைகள் வேறுபடுகின்றன. எனவே அவற்றை மதிப்பிட நாம் கையாளும் அளவுகோல்களும் (Norms) வித்தியாசமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் எமது துரதிர்ஷ்டம் வையெல்லாவற்றையும் ஒருவரே செய்து முடிக்கிறார். பெரும்பாலும் அவரே இலக்கிய விமர்சகராகவும் இருக்கிறார். இசைக்கலையை ரசிப்பதற்கு செவிப்புலனுணர்வு நன்கு வார்த்தெடுக்கப்பட வேண்டும். சுருதி பேதங்களைப் பிரித்தறியும் ஆற்றல் இருக்க வேண்டும் இராக பேதங்களையும் கற்பனை விருத்திகளையும், சுர ஞானங்களையுமறிய ஆற்றலிருக்க வேண்டும். அவ்வாறாயின் இசையை நாம் நன்கு இரசிக்கலாம், நன்கு விமர்சிக்கலாம். இதுபோலவே, நாடகத்தின் சூட்சுமங்களை ஒருவர் அறிந்திருப்பின் அக்கலையை இரசிப்பதும், பொறுப்போடு விமர்சிப்பதும் இலகுவாகிறது. பொறுப்பான விமர்சனம் கலைகளைப் புதிய பரிமாணங்களுககு வளர்த்தெடுக்க ஏதுவாக அமையும். எனவே எமது பாரம்பரிய நாடகங்கள் பற்றியும் பிற நாட்டு நாடகங்கள் பற்றியும்; இங்கும் அங்கும் நடைபெறும் முயற்சிகள் முன்னெடுப்புக்கள் பற்றியும் தெரிந்திருப்பதோடு, நாடகக் கூறுகள் பற்றிய செயல்முறை அறிவு (Working knowledge), மேடை இயக்கங்கள் பற்றிய அறிவு; இசைப் பரிச்சயம்; ஒளிச் செயற்பாடுகள் பற்றிய அறிவு; நாடகம் தொடர்பு கொள்ளும் பாங்கு; இரசனையை ஏற்படுத்தும் முறைமை; ஒன்றிக்க வைக்கும் தன்மை; வேறு பிரித்து நிற்கும் தன்மை; கருத்து வெளிப்பாட்டுக்கான உத்தி முறைகள் போன்ற அம்சங்களை, ஒரு நாடக விமர்சகன் அறிந்திருப்பது அவசியமாகிறது. இவற்றை ஒருவர் அறிந்திருப்பின் இக்கலையை அவர் இரசிக்கும் பாங்கும், அதை விமர்சிக்கப் புகும்போது அவர் கையாளும் அளவுகோலும் (Standards and Norms) வேறுபடும். நாடகம் முழுமையாக நோக்கப்படும், விமர்சிக்கப்படும். அகவயமாக நோக்கப்படாது புறவயமாக நாடகம் நோக்கப்படும் தன்மை வளரும். ❑

## மையித்துக்கள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷர்மிலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை ..... பள்ளிவாசலா?... காசா?... பாக்கியா? ... என்ன இது?...... அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"அதுதாம்புள்ள, ...... பள்ளிக்காசு! பாக்கி ......"- முகத்தில் எந்தவித மாற்றமும் இன்றி அவர் மீண்டும் அப்படிக் கூறியதும், அந்தப் புரியாத நிலையிலும் அவள் வாய் திறந்தாள்: "பள்ளிக் காசா?...... என்ன முத்தா இது?"

"அதுதாம்புள்ள, ஊர்ப் பள்ளிக்குக் கட்ட வேண்டிய காசு!.... ஒன்ற வாப்பா "

"அதுக்கென்ன இப்போ ?"

உண்மையிலேயே புரியாமல் தான் கேட்டாள் அவள் அப்துல் ஹமீது மீண்டும் தயங்கினார். ஆனாலும் உறுதியாகக் கூறினார்: 'புள்ள ஷர்மிலா, பள்ளிக் காசு பாக்கியக் சட்டாமே மையத்தைக் கொண்டு போறது சரியில்லே புள்ள!... "

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது பள்ளிக காசுக்கும் மையித்துக்கும் என்ன சப்பந்தம்? ஏன் கொண்டு போகக் கூடாது? ...

அவரே தொடர்ந்தார்: "நமம ஊர் வழமை ஒனக்குத் தெரியுந்தானே! பள்ளிக் காசைக் கட்டினாத்தான் மையித்துக் கடமையை நெறைவேத்தலாம்! ஊர்க் கட்டுப் பாட்டை மீறக்கூடாது புள்ள! .."

ஷர்மிலாவுக்கு இப்போது கொஞ்சம் விளங்கியது — "அதுக்கு நான் என்ன செய்யணும் முத்தா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"நீ ஒண்ணும் செய்ய வேணாம்! உம்மாட்டைச் சொல்லி அந்தக் காசைக் கட்டிப்போடு!"

"காசா, எவ்வளவு, முத்தா?"

அவர் தலையைச் சொறிந்து கொண்டு கூறினார்: "அதிகமா ஒண்ணுமில்லே ... வந்து ஒரு ... நானூத்தித் தொண்ணூத்தஞ்சி ரூபா ஐம்பது சதம் ... "

ஷர்மிலா அப்படியே அதிர்ந்து விட்டாள் . " உம்மாடீ!... இவ்வளவு காசா?...... எங்க கிட்டே எங்கே இரிக்கி ..."

"உம்மாக்கிட்டே கேட்டுப் பாரு! ......"

"உம்மாக்கிட்டே எங்கே கேக்கிறது? ...எங்க வாப்பா மௌத்தாகினதே பசியிலயும் பட்டினியிலயும்தானே!......... எங்ககிட்ட ஒரு செப்புச் சல்லி கூட இல்ல! ......"

சுற்றி நின்றவர்கள் மௌனமாக நின்றனர், அவர்ளுக்கு உறவினர்கள் என்று எவரும் இல்லாததனால் தூரத்துச் சொந்தக்காரர்களும் தலையைக் குனிந்து கொண்டு நின்றனர். கொஞ்சம் பழக்கமான பக்கத்து வீட்டுக்காரர்களும் முகத்தை அங்குமிங்கும் அலைய விட்டுப் பராக்குப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

'புள்ள இப்ப நீ என்ன சொல்ரு?... " - மரைக்கார் அப்துல் ஹமீது உறுதியாக அதே வேளை கொஞ்சம் கடுமையாகவே கேட்டார்

ஷர்மிலா சில விநாடிகள் யோசித்தாள். வீட்டு நிலைமை அவளுக்கு நன்கு தெரியும்... "ஏனமுத்தா, இந்த காசை இப்ப ஒடனடியாக் கட்டாட்டி ......"

அவள் முடிக்குமுன் அப்துல் ஹமீது குறுக்கிட்டார்; "காசை இப்ப கட்டாட்டி மையித்தை கபுறில அடக்க முடியாது!" அவரது பதில் உறுதியாக இருந்தது. ஷர்மிலா பத்ர காளியானாள். அவளது தலையில் வேப்பமரத்து சியாச்சி ஏறிக் கொண்டது.

"ஏன் கபுறு ஏற்றுக் கொள்ளாதா?"

மரைக்காருக்கும் ரோஷம் வந்துவிட்டது ஊருக்குப் பெரியவர். பள்ளி ட்ரஸ்டி, வயதுகு மூத்தவர். அவரை இந்தச் சின்னக் குட்டி நையாண்டி செய்தால் அவர் பொறுத்துக்கொள்வார் என்று எதிர் பார்க்க முடியுமா? அவரும் சுடச்சுடப் பதில் கொடுத்தார்

"கபுறு ஏத்துக் கொள்ளுதோ என்னவோ, நாங்கள் ஏத்துக்கொள்ள மாட்டோம்"!

ஷர்மிலாவின் முகம் ஜிவுஜிவு என்று சிவந்தது

"நீம ஏத்துக் கொள்ளாட்டிப் போங்காணும்! எங்க வாப்பாட ஒடம்பத் தின்னப் போறது நீம இல்ல! இந்த மண்ணுதான்! ஆண்டவன், மனிதர்ட ஒடம்ப மண்ணு தான் திங்குமுன்னு சொல்லியிருக்கான்! ..." கோபாவேசமாகக் கத்தியவள் மீண்டும் தொடர்ந்தாள்: "வாழத்தான் வழியில்லே: வாழமுடியாம சாவை அணைச்சிக்கிட்டாக்கூட அந்தப் பொணத்தைப் பொதைக்கிறதற்கு தடையா நிற்கிறீங்களே!...... இதுதானா ஓங்கட இஸ்லாம்? ......"

தர்க்கரீதியாக இதற்குப் பதில் சொல்ல முடியாமல் போய் விட்டாலும், அப்துல் ஹமீதும் விட்டுக் கொடுக்கவில்லை: "புள்ள! தேவையில்லாம அசிங்கமாக் கதைக்காதே!..... ஒனக்கு இப்ப உட்டுத்தந்தா இது ஊர் வழக்கமாப் போயிரும். இதை உட்டா வசூலிக்க வேற சந்தர்ப்பமும் இல்லே! ஊர்க்கட்டுப்பாட்டை மீறுதே! ...... சொல்லுறதைக் கேளு! ......"

மரைக்கார் முடிக்குமுன் தொண்டைகிழியக் கத்தினாள் ஷர்மிலா: "ஒரு செம்புச் சல்லியும்தர மாட்டேன்!" ..... பிறகு தாழ்ந்த குரலில் கூறினாள்: "எங்ககிட்டே ஒரு செம்புச் சல்லியும் இல்ல ...... அதான் ..."

உம்மா பதட்டத்துடன் அருகில் ஓடி வந்தாள். "புள்ள! ... ஷர்மிலா! ...... வாயைப் பொத்து புள்ள! ... நீ படிச்சவண்டு பேர்தான்!......கதைக் கக்கூடத் தெரியல்ல!...... காக்கா! ... நீங்க கொஞ்சம் சபூர் செய்யுங்க, காக்கா!... " என்று அப்துல் ஹமீதிடம் கெஞ்சவாரம்பித்தாள்.

ஷர்மிலா மீண்டும் பத்ரகாளியானாள். சுற்றி நின்ற ஆண்களும் இளவட்டங்களும் வேடிக்கை பார்த்தனர் ...... "உம்மா! ...... எனக்கு கதைக்கத் தெரியும்! ஒங்களுக்குத்தான் கதைக்கத் தெரியாது! நீங்கள்ளாம் இப்படிக் கதைச்சுக் கதைச்சுத்தான் நம்ம சமுதாயம் இவ்வளவு கீழ் நிலையில இருக்கு! கோழைகளாகவும் அடிமைகளாகவும் வாழ்ந்து வாழ்ந்து தான் இந்தப் பெரிய மனுசனுவ இஸ்லாத்துக்கு மாறு செய்யிறதையும் பொறுத்துக் கிட்டு இருக்கீங்களுவோ!"

இடையில் குறுக்கிட்டார் அப்துல ஹமீது. அவரது முகம் கடுங்கோபத்தில் எரிந்தது.

"புள்ள, நீ இப்ப என்ன சொலுறு?... சண்டித்தனத்தால சாதிக்கலாம்னு பாக்கிறீயா?... மரியாதையா பேசு! சரியானவாயாடியாவும் சண்டிச்சியாவும் இருக்கிறீயே சீ...!"

"ஆமாம், முத்தா! நீதி, நியாயம் கேட்பவுங்களுக்கு இந்த ஒலகத்தில பட்டப்பேர் சண்டிச்சிதான்; பாதகமில்லே ... ஒங்க வேலையை நீங்க பாக்கலாம்!..."

அந்த அழகிய முகம் வெண்கலத்தில் வார்த்ததுபோல் பிரகாசித்தது. கண்கள் உணர்ச்சியுடன் மின்னின.

மரைக்கார் அமைதியுடன் சொன்னார் "என்ன செய்யிறது!... எல்லாம் அல்லாட நாட்டம். நாம லெப்பையைக் கூட்டிக்கிட்டு இந்த ஊட்டை உட்டே போயிட வேண்டியதுதான். ஊருக்குக் கட்டுப்படாதவண்ட மையித்தை நாம ஏன் தூக்கணும்?... நாய் தான் தூக்கும்!"

அவர் வார்த்தையை முடிக்கவில்லை. உணர்ச்சிப் பிளம்பாய்க் கொழுந்து விட்டெரிந்தாள் ஷர்மிலா. அவளது அழகிய வாய் தீயைக் கக்கியது.

"நாய் தூக்கத் தேவையில்லை முத்தா! நாய் ஏன் தூக்கணும்? ..." வார்த்தையை நிறுத்திவிட்டுத் தீட்சண்யம் மிக்க அந்தக் கண்களால் சுற்றி நிற்போரை ஒரு முறை ஊடுருவினாள் அவள். அவளது முகம், இந்த உலகிலேயே பலம் கொண்ட சம்மட்டியினால் அடித்தபோதும் உடையாத அளவுக்கு உறுதியாகவிருந்தது. இதழ்க்கடையில் மெலிதான புன்னகை, அந்தச் செவ்விதழ்களை மேலும் சிவப்பாக்கியது.

"நாய் ஏன் தூக்கணும்? .... அடியே பல்கீஸ், நஸீரா, ஷீனத்!...... பொடைவையை மடிச்சுக் கட்டுங்கடி! .... தம்பி நஸீர், ஜலீல்! நீங்களுவளும் ஒரு கை குடுங்கடா! ... உம்மா! நீங்க பேசாம ஊட்டுல இருங்கோ! வாப்பாட மையித்தை அடக்கிட்டு வாறோம்! ...... ஆலிமும் வாணாம் லெப்பையும் வாணாம்! ஆண்டவன் ஒருவனே போதும்!"

அவளது உடல் உஷ்ணத்தில், காய்ந்து கொண்டிருந்த சனக்கும்பல் வார்த்தையின் உஷ்ணத்தால் கருகிப் பொசுங்கியது.

குறிப்பு: றூஹு — உயிர்
மையித்து—சவம் ❑

# 1983 ஆம் ஆண்டின்

## "ஒக்ஸ்போர்ட்" மூளை

"தமிழரின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடைய மாட்டாது. இளைஞர்கள் நவீன ஆயுதங்களைத் தாங்கப் போவதில்லை. அவர்களால் சில மரபுவழி ஆயுதங்களையும், உள்ளூர்த் தயாரிப்பு ஆயுதங்களையும் தான் தாங்க முடியும். எனவே அவர்களை இலகுவாக நசுக்கிவிடலாம்." இவ்வாறு 1983 ஆம் ஆண்டு திருவாளர் ஒக்ஸ்போர்ட் கூறினர்.

"சரி, நவீன ஆயுதங்களை தமிழ் இளைஞர்கள் தாங்குவார்கள் என வைத்துக்கொண்டால் என்ன செய்வீர்கள்?" —இவ்வாறு இராணுவ விஞ்ஞானம் பற்றிப் பயின்ற ஒரு முன்னாள் ஜே வி.பி. உறுப்பினர் அவரைக் கேட்டார்.

"பலஸ்தீனியரின் போராட்டத்தை இஸ்ரேலியர் அடக்குவதுபோல" என, ஒக்ஸ்போர்ட் மூளை பதிலளித்தது.

"அரபு நாடுகளுள் புகுந்து அராபியர்கள் மீது பெரும் தாக்குதலைப் புரியும் வல்லமையை இஸ்ரேல் பெற்றுள்ளது. அப்படி உங்களால் தமிழகத்தின் மீதும், இந்தியா மீதும் பெரும் தாக்குதலைப் புரியமுடியுமென்றால், நீங்கள் நினைக்கும் இராணுவக் கண்ணோட்டம் சரியானது" என்றார், முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர்.

"நீர் நினைப்பதுபோல இந்திய அரசு ஈழக் கோரிக்கையில் நடந்து கொள்ளப் போவதில்லை அதில் இந்திய அரசைப் பற்றிய உமது அரசியற் கணிப்பீடு தவறானது" என்றது, ஒக்ஸ்போர்ட் மூளை.

"அப்படியாயின் இராணுவ ரீதியாக ஒடுக்குவது சாத்தியம் என்று,முழுமையாக நம்புகிறீர்களா? என்று அவர் கேட்க, முழு நம்பிக்கையுடன் ஒக்ஸ்போர்ட் மூளை "ஆம்" என்று பதிலளித்தது.

ஈழக்கோரிக்கைக்கு இந்திய அரசு ஆதரவளிக்காது என்று ஒக்ஸ்போர்ட் மூளை கருதியது சரி. ஆனால், ஒரு பிரச்சினை உருவாகிவிட்டால் அது யதார்த்தத்தில் எத்தகைய இயல்பான வளர்ச்சியைப் பெறும் என்பது பற்றி உணரும் திறன், அந்த ஒக்ஸ்போர்ட் மூளைக்கு இருக்கவில்லை. கெரில்லா யுத்தம் நவீன தன்மையைப் பெறமுடியும் என்ற அறிவும் அந்த மூளையில் பதியத் தவறிவிட்டது.

ஒக்ஸ்போர்ட் மூளையின் கணிப்பீடும் அதன் இராணுவத் தீர்வும் இந்த நாட்டை, இன்று எங்கு கொண்டுபோய் விட்டுள்ளது?

**சுதேசி**

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு (இனக்கலவரம்) நடவடிக்கையைத் தொடர்ந்து, அதற்கான பழியை ஜே. வி.பி. யின் தலையிற் போட்டு, ஜே. வி. பி. யை அரசு தடை செய்தது. அப்போது திருமலைத் துறைமுகத்தில் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் ஜே.வி.பி. உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். அந்த உறுப்பினரை விசாரித்தபோது, பட்டதாரியான அவர் உண்மையில் ஜே வி. பி. யின் முன்னாள் உறுப்பினர் என்பதும், பின்பு அதிலிருந்து வெளியேறிவிட்டார் என்பதும், அதன்பின்பு, அவர் லண்டனிலுள்ள ராணுவக் கல்வி நிலையம் ஒன்றில் இராணுவ விஞ்ஞானம் பயின்றிருந்தார் என்பதும், அரசியலில் ஈடுபடும்நோக்குடன் அவர் நாடுதிரும்பிய போதிலும் நாடு திரும்பிய பின்பு அரசியலில் இருந்து ஒதுங்கி, துறைமுகத்தில் பணி புரிந்தார் என்பதும், தெரிய வந்தது. இவர் பற்றிய தகவல்களை பொலிஸார் அந்த ஒக்ஸ்போர்ட் மூளைக்கு அறிவித்தனர். கைதி இராணுவ விஞ்ஞானம் பயின்றவர் என்ற காரணத்தினால், அவரைக் கொழும்புக்கு கொண்டுவருமாறு ஒக்ஸ்போர்ட் மூளை கட்டளையிட்டது. அப்போது ஒக்ஸ்போர்ட் மூளைக்கும் கைதிக்கும் இடையில், நீண்ட உரையாடல் நிகழ்ந்தது. அதிலிருந்து ஒரு பகுதியே மேலே தரப்பட்டதாகும். கைது செய்யப்பட்ட அவர், கொழும்பில் வைத்து ஒக்ஸ்போர்ட் மூளையின் விருப்பப்படி உடனடியாக விடுதலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ❑

# உருளும் இலங்கை

## ஒக்ஸ்போர்ட் மூளையின புதிய கண்டுபிடிப்பு!

நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால் சமாதானம், ஜனநாயகம், பொருளாதார முன்னேற்றம், இனப் பிரச்சினைக்கான தீர்வு ஆகிய நான்கு அம்சங்களுக்கும் ஒரே நேரத்தில் தீர்வுகாண வேண்டும், இதில் ஏதாவது ஒன்றை விட்டு தீர்வுகாண முற்பட்டால் அது பலனளிக்காது என்று, அமைச்சர் லலித் அத்துலத்முதலி 9/9/89 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில், குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாத எந்தத்தீர்வும் தீர்வாகாது என்பதை அமைச்சர் கண்டுபிடித்து விட்டார்! இதனைக் கண்டு பிடிப்பதற்கு இந்த ஒக்ஸ்போர்ட் மூளைக்கு இத்தனைகாலம் தேவைப்பட்டதோ! பொருளாதார முன்னேற்றம் அடைந்தாற்தான் நாடு முன்னேறும் என்றும், இனப்பிரச்சினை தீர்ந்தாற்தான் நாடு முன்னேறும் எனினும் சொல்வதற்கு ஒரு பெரிய ஆராய்ச்சியும், ஒக்ஸ்போர்ட் மூளைகளும் தேவையில்லை. சிறுபிள்ளை கூட கண்ணை மூடிக் கொண்டு அதைச் சொல்லும்.

ஒ! ஒக்ஸ்போர்ட் மூளையே!! இப்போதுள்ள கேள்வி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமா ? இல்லையா? என்பதல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று எல்லோரும் சொல்லலாம். எப்படித் தீர்வுகாணவேண்டும் என்பதுதான் இப்போதுள்ள தேவை. ஆனால் அதை எப்படிக் காண்பது என்பதே இன்றைய கேள்வி. தமிழ் மக்கள் மீது "செல்" அடிப்பதன் மூலம் தீர்வுகாண வேண்டுமா? வானத்திலிருந்து மக்களின் தலைகளில் எரிகுண்டுப் பீப்பாக்களை உருட்டி விடுவதன் மூலம் தீர்வுகாணவேண்டுமா ? அல்லது ஹிட்லர் பாணியிலான முழு இன அழிப்பா ? அல்லது ஆக்கபூர்வமான வகையில் தமிழ் மக்களை அரவணைத்து வாழக்கூடிய உண்மையான அரசியற் தீர்வா ? அது எப்படிப்பட்ட அரசியற்தீர்வு, எத்தகைய ஆட்சி அமைப்பு முறையைக் கொண்ட தீர்வு என்பதையே முதலில் இந்த மெத்தப்படித்த மூளை சொல்ல வேண்டும்.

ஒக்ஸ்போர்ட் மூளையே இப் பிரச்சினைக்கான பொறுப்பை வேறு யாரின் தலையிலும் நீங்கள் சுமத்தமுடியாது ஒன்று இரண்டு தடவைகள் அல்ல, மூன்றுவது தடவையாகவும் இன்று உமது கட்சி ஆட்சியில் உள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணும் முக்கிய பொறுப்பு, கடந்த அரசாங்கத்தில் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்போதெல்லாம் பிரச்சினைகளைப் பூதாகரமாக்கி சகல அந்நியப்படைகளையும் இந்த நாட்டுக்கு வரவழைத்தவர் நீரே.

நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்றுண்டு என்று சொல்ல ஒக்ஸ்போர்ட் மூளை தேவையில்லை. அதனை எப்படித் தீர்க்கலாம் என்பதைச் சொல்லும் ஆற்றல் இந்த ஒக்ஸ்போர்ட் மூளைக்கு இருக்கிறதா என்பதே முக்கியம். ❑

## இடைக்கால அரசு தேவையா?

ஆன்று இலங்கையில் ஓர் இடைக்கால அரசை நிறுவ வேண்டும் என்றும் அது பழைய பிரித்தானிய வெஸ்ற் மினிஸ்ரர் முறைக்கமைவுடையதாக இருக்கவேண்டும் என்றும் ஐந்து எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன (இந்த மாற்றத்தின் மூலம் இலங்கையின் அமைதியின்மையை போக்குவதற்கு வழி ஏற்படும் என்று அவை கருதினல் அது வெறும் மாயையே என்பது பற்றி ஏற்கனவே திசையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)

ஆனல் இந்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கையான வெஸ்ற் மினிஸ்ரர் ஆட்சிமுறை அமைப்புக்குத் திரும்பிப் போதல் அவசியந்தானா அது சாத்தியமானதா என்பது பற்றி ரணில் விக்கிரமசிங்க பின்வருமாறு கூறுகிறார்.

1. தற்போதுள்ள புதிய அரசமைப்புச் சட்டம் 1977 இல் இடம் பெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆனல்

(11ஆம் பக்கம் பார்க்க)

# 2010இல் உலகம்:

## 'பென்ரகனின்' ஆய்வு நூல்

2010 ஆம் ஆண்டு உலகம் எப்படி இருக்கும் என்பது பற்றி அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடம் பென்ரகன் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. நீண்டகால பொருளாதார இராணுவப் போக்குகள் 1950—2010 - ஒரு றண்ட் குறிப்பு (A Rand Note Longterm Economic and Military Trends 1950 – 2010) என்ற தலைப்பில், அவ்வெளியீடு அமைந்துள்ளது.

இப்போது இருப்பதைவிட இந்தியாவின் பலம் இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தென்னாசியாவில் அதிகரிக்குமென அவ்வாய்வு கூறுகின்றது.

சோவியத் யூனியனில் கொர்பச்சேவ் மேற்கொண்டு வரும் மறுசீரமைப்புப்பணி வெற்றியில் முடியுமாயின், 2010 ஆம் ஆண்டு சோவியத்தின் மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product) 469700 கோடி டொலராக இருக்குமென்றும், மறுசீரமைப்பு தோல்வியில் முடிந்தால் 287000 கோடி டொலராக அது அமையுமென்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல 2010 இல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தி 785000 கோடி டொலரென்றும், சீனாவினுடையது 379100 கோடி டொலர், ஜப்பானினது 371400 கோடி டொலர், இந்தியாவினுடையது 133000 கோடி டொலர், பிரித்தானியாவினுடையது 94900 கோடி டொலர் எனவும், இவ்வாறு பல நாடுகளைப் பற்றியும் அது கணிப்பீடு செய்துள்ளது.

மேலும், ஆயுதங்களுக்கான வருடாந்த செலவீடுகளைப் பற்றிக் கணிப்பீடு செய்கையில் 2010 இல் அமெரிக்காவினுடையது 46200 கோடி டொலரெனவும், சோவியத்யூனியனுடையது 41100 கோடி டொலர் எனவும், சீனாவினுடையது 21800 கோடி டொலர் எனவும், இந்தியாவினுடையது 5300 கோடி டொலர் எனவும் கூறப்பட்டுள்ளது.

தென்னாசியாவில் தனக்கேற்படக்கூடிய பாதிப்பைச் சரி செய்வதற்கு அமெரிக்கா தூர கிழக்கு நாடுகளை நோக்கித் தனது கவனத்தைச் செலுத்த வேண்டுமெனவும், அதற்கான வழிகளையும் அவ்வாய்வு கூறியுள்ளது.

**சரண்யன்**

2010 ஆம் ஆண்டில் இந்த உலக நிலை எப்படி இருக்கப் போகின்றது என்றும், அதில் அமெரிக்காவிற்கு எத்தகைய சாதக பாதகமான நிலைமைகள் நிலவும் எனவும், பாதகமான நிலைகளை எவ்வாறு அமெரிக்கா சமாளித்து தனது முதன்மையை வளர்க்க வேண்டுமெனவும், இந்த ஆய்வுநூல் ஆலோசனை வழங்கியுள்ளது. ஆனல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முழு விபரங்களும் இந்நூலில் வெளியிடப்படவில்லை; ஒரு பகுதி மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

உலகத்தை எப்படி எப்படியெல்லாம் சுருட்டித் தனது பொக்கற்றுள் அமெரிக்கா வைக்கலாம் என்பன போன்ற முடிவுகள் அந்தரங்கமாக வைக்கப்பட்டு, மிகுதிதான் வெளியிடப்பட்டுள்ளது என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

2010 ஆம் ஆண்டு உலகம் எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பற்றி அமெரிக்க அறிஞர்கள் சிந்திக்கிறார்கள். அதற்கேற்ப அமெரிக்கா எவ்வாறு நெளிவு சுழிவாக இப்போதிருந்தே செயற்பட வேண்டும் என்றெலாம், அந்த அறிவு ஜீவிகள் சிந்திக்கிறார்கள். ஆனல் இந்த மண்ணில் வாழும் எங்கள் அறிவு ஜீவிகள் அடுத்தநிமிடம் என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றிச் சிந்திப்பவர்களாகவோ, என்ன நடக்கப் போகிறது என்பது பற்றிய முன்னறிவை சிறிதளவேனும் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாகவோ, தெரியவில்லை.

பொதுவாக மூன்றாம் உலக நாடுகளின் அறிவுத்துறை மிகவும் மந்தகரமாய் உள்ளது. அறிவுத் துறையின் தலையாய அம்சம் தூரநோக்கும் முன்னுணர்வும்தான். தூரநோக்கும் முன்னுணர்வுமற்ற அறிவு சமூகத்தை வழி நடத்த உதவாது. எனவே பொறுப்புணர்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் எமது சமூகம் அறிவுத்துறையில் ஆழ்ந்து ஈடுபட வேண்டும்.

21 ஆம் நூற்றாண்டு பற்றி பல்வேறு நூல்கள் அமெரிக்காவில் வெளிவந்துள்ளன. அமெரிக்க அறிஞர்கள் 21 ஆம் நூற்றாண்டைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். குறைந்த பட்சம் அடுத்த ஆண்டைப் பற்றியாவது நாங்கள் முறையாகச் சிந்திக்கவேண்டாமா? ❑

## அவிழ்க்க...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தியுண்டு. இங்கு இவரது கட்சியினர் இவருடன் ஒட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம், கட்சியைவிட்டு வெளியேறினால், ஆயுத அரசியல் வெளியில் நன்கு வளர்ந்திருக்கும் சூழலில், தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதுதான். எனவே இன்றுகட்சியின் ஐக்கியம் பேணப்படுவதற்கும், அதுவொரு பலமாக இருப்பதற்குமான காரணம், கட்சிக்கு வெளியே இவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதுதான்.

அடுத்து இராணுவத்தின் மத்தியில் இவரது பலத்தை நோக்குவோம். உண்மையில் இராணுவத்தில் செல்வாக்கு மிக்கவர்கள் ஜே. ஆர்., லலித், ரவி ஜயவர்த்தன போன்றோர்தான். அந்த வகையில் பிரேமாவுக்கு இராணுவத்தில் செல்வாக்கு போதியளவு இல்லை. ஆனால் ஜே. வி. பி. இராணுவத்தினர் மீதும் அவர்களது குடும்பங்களின் மீதும் மேற்கொள்ளும் தாக்குதலின் காரணமாக, இராணுவத்தினர் ஒருமுனைப்பாக நின்று செயற்பட வேண்டிய அவசியம், அவர்களுக்குள்ளது. எனவே இருக்கும் ஆட்சியாளனைப் பயன்படுத்தி அதனைச் செய்ய வேண்டிய அவசியத்தின் பெயரிற்தான், அவர்கள் பிரேமாவுக்கு ஒத்துழைக்கிறார்கள். ஆனால் நெருக்கடி வளரும் கட்டத்தில், இராணுவத்துள் செல்வாக்குள்ள மேற்கூறியவர்கள் யாராவது பதவிக்கு வருவதை, இராணுவம் விரும்பலாம். எனவே தற்போது பிரேமாவுக்கு இருக்கும் இராணுவ பலமும், ஒரு நிர்ப்பந்த சூழலில் தவிர்க்கமுடியாதவாறு அவர்கள் அளிக்கும் ஆதரவேதான்.

அடுத்து, இவரது பொருளாதாரப் பலத்தையும் உலக நாடுகளின் ஆதரவையும் நோக்குமிடத்து, நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து அடைந்துள்ளது. வெளி நாடுகளின் நிதி உதவி போதியளவு இல்லை என்பதுடன், நிதி வழங்கும் ஸ்தாபனங்கள் கூடிய கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. எனவே பொருளாதாரரீதியிலும் இவர் பலமற்றவரே.

வெளிநாடுகளின் ஆதரவைப் பொறுத்தவரையில் இந்தியாவின் எதிர்ப்பு இவருக்கு உண்டு. அமெரிக்காவும், சோவியத் யூனியனும் வேறு வழியின்றி இவரை ஆதரிக்கின்றன. ஆனால் இவரது ஆட்சி கவிழ்ந்து ஜே. வி. பி. அல்லாத ஓர் இராணுவ அரசானது உருவானால் இந்தியா, அமெரிக்கா, சோவியத் என்பன அத்தகைய இராணுவ அரசை ஆதரிக்கும். ஜே. வி. பி. தவிர்ந்த ஓர் இராணுவ அரசை இம்மூன்று அரசுகளும் ஆதரிக்குமென்பது, ஓர் அதிசயமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை.

எனவே இன்றைய சூழல் பிரேமாவுக்குப் பலவழிகளாலும் பலவீனமானது. பிரேமாவுக்குப் பதிலாக யார் பதவிக்கு வந்தாலும், மிஞ்சப் போவது இரத்தக் களரியாகவே இருக்கலாம். இராணுவப் பாதையில் தீர்வில்லை என்பதை முதலில் அனைவரும் உணர்வார்களா? □

## இடைக்கால...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கெதிராக, வெஸ்ற்மினிஸ்ரர் நாடாளுமன்றமுறைக்குத் திரும்ப வேண்டும் என்னும் கோரிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் 1982 இல் போட்டியிட்ட ஹெக்ரர் கொப்பேகடுவவும் 1988 இல் போட்டியிட்ட சிறிமாவோவும் தோல்வி கண்டனர்.

2. தற்போதுள்ள விதிப்படி அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டுமெனின் சர்வஜன வாக்கெடுப்பில் மக்களது ஒப்புதல் பெறப்படவேண்டும். இன்றைய நிலையில் இது சாத்தியமா ?

3. இப்புதிய மாற்றம் சமூக, பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் காண்பதை உறுதிப்படுத்த வேண்டும். இன்றுள்ள புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ், முன்னைய நாடாளுமன்ற முறையின் கீழ் இருந்ததைவிட, (இத்தனை அமைதியின்மைக்குள்ளும்) சமூக பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் தனியார்துறை உற்பத்தி 11% உயர்ந்திருக்கிறது.

4. தற்போதுள்ள தீவிரவாதக் குழுக்களான எல். ரி. ரி. ஈ., ஜே. வி. பி போன்றவை வெஸ்ற்மினிஸ்ரர் அமைப்புக்குத் திரும்பிப் போகவேண்டும் என்று கோரியதில்லை.

5. இப்படி வெஸ்ற்மினிஸ்ரர் அமைப்புக்குத் திரும்பிப் போவதால், மீண்டும் நாட்டில் அமைதியும் கட்டுப்பாடும் சந்தோஷமும் ஏற்பட்டு விடுமா ? உண்மையில் செய்ய வேண்டியது, எல்லா அரசியல் கட்சிகளும் இன்றைய அமைதியின்மையைப்போக்குவதற்கு உருப்படியான வழிமுறைகளைக் காண்பதே. □

## இலங்கை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதைக்க வேண்டாம் என்று கூறி அனுப்பி விட்டார். இப்படியான பல சம்பவங்களினால் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் துயரத்தின் விளிம்பில், தமது அடிப்படை உரிமைகள் கூட அற்ற நிலையில், சிறைக் கம்பிகளின் பின்னால் வாடுகின்றனர். இப்படி பல அடக்கு முறைகளுக்கு மத்தியில் வாடிக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் அரசியல் கைதிகள், சிங்கள அரசியல் கைதிகளிலும்பார்க்க கூடிய சலுகையுடன் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர் என்று வெளிவந்த செய்தி நகைப்புக்குரிய விடயமாயினும், இச்செய்தி பெரும்பான்மைச் சமூகத்தினரை எவ்வகையில் உணர்ச்சிவசப்படுத்தி, அவர்களினால் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் எவ்வகையான தாக்கத்துக்கு உள்ளாகப் போகின்றனர் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று நாட்டில் தலைதூக்கித் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இனவாதத்துக்குத் தூபமிடும் வகையிலேயே, இச்செய்தி அமைந்துள்ளது. இதனால் பாதிப்புக்குள்ளாகப் போவது தமிழ் பேசும் அரசியல் கைதிகள் என்பதை, சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகையின் பணி பாரியதாகும். மக்களுக்கு வழிகாட்டியாகவும் செய்திகளை பரிவர்த்தனை செய்யும் மக்கள் தொடர்பு சாதனமாக பணியாற்ற வேண்டிய பத்திரிகை, இப்படியான உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு இனவாதத்தையே தூண்டியுள்ளது. வரும் காலத்திலாவது இப்பத்திரிகை குறுகிய சிந்தனை, இலாப நோக்கு, இனவாதத்தை தூண்டுதல் போன்றவற்றிற்கு அடிமையாகாமல் தெளிவான சிந்தனையுடன் யதார்த்தத்துக்கு முரணாகாத வகையில் செயற்பட வேண்டும் என்று, கேட்டுக் கொள்கின்றோம். □

இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர்
விற்பனையாளர்

**கே.கே.ஏ. கந்தையாபிள்ளை**

(உரிமை: ஏ. கே. நடராசா)

316, ஆஸ்பத்திரி வீதி — 26, வைமன் வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22311 தந்தி: 'முருகன்'

## வட — கிழக்கில் மலையக இளைஞர்கள்!

நுவரெலியா மாவட்டத்திலிருந்து வந்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட மலையக இளைஞர்கள், வடக்கு, கிழக்குப் பகுதியிலுள்ள அமைதிப்படையின் கீழ் ஆயுதப் பயிற்சி பெறுவதாகவும் இவர்கள், முக்கியமான பாதைத் தடைகள் போடப்பட்டுள்ள இடங்களிலும், ஆள் பரிசோதனை நடைபெறும் இடங்களிலும் கடமையாற்ற விடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. ருகலை, மஸ்கெலிய, ஹற்றன், கொட்டக்கல போன்ற இடங்களில் இருந்தே இந்த இளைஞர்கள் வந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

## நிகழ்வுகள்!

### 5 - 9 - 89 செவ்வாய்

அனைத்துக் கட்சி மாநாட்டின் முன்னர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக, எதிர்க்கட்சி முன்னணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தெரிவித்தன □ வடக்கின் மின்சாரப் பிரச்சினைக்கு ஒரு வார காலத்துள் தீர்வுகாண தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா உறுதியளித்ததாகச் செய்தி வெளியானது □ அகலவத்தை முன்னாள் எம். பி. மெரில் காரியவாசம் இரத்மலானையில் அவரது அலுவலகத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார் □ காலை, உடுப்பிட்டிப் பகுதியில் பலத்த தேடுதல் இடம்பெற்றது □ தலைநகரில் தேங்கிக்கிடந்த தபால்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன □ ஈ. ஐ. மு. உயர்மட்டக்குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது □

### 6 - 9 - 89 புதன்

தனியார் துறையினையும் கட்டாய சேவையாக அவசர காலச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தும் விசேட கட்டாயசேவைச் சட்ட விதிகளில், ஜனாதிபதி கையெழுத்திட்டார் □ பம்பலப்பிட்டி காலி வீதியில் ஜீப் மீது குண்டு வீசப்பட்டதில் 3 பொலிசார் கொல்லப்பட்டனர் □ ஐந்து ஹெலிகொப்ரர்களில் நெடுந்தீவில் வந்திறங்கிய அமைதிப்படையினர், அதனைச் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர் □ தென்னிலங்கையில் 2 பெண்கள் சுட்டுக்கொல்லப்பட்டதோடு 200 பேர் கைதுசெய்யப்பட்டதாக அரசு அறிக்கையில் கூறப்பட்டது □ வல்வெட்டித்துறைப் பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □

### 7 - 9 - 89 வியாழன்

அனைத்துக் கட்சி மாநாட்டிற்கான அரசின் அழைப்பினை 10 கட்சிகள் ஏற்றுள்ளதாக, அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ வல்வெட்டித்துறை நாவலர் மடம் பகுதியில் மோதல் சம்பவம் இடம் பெற்றது; பொதுமக்களில் பலர் அப்பகுதியிலிருந்து வெளியேறுகின்றனர் □ மொறவெவவில் இடம் பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தில் 2இலங்கை இராணுவத்தினர் பலியாகினர்; 3 பேர் படுகாயமடைந்தனர் □ அமைதிப் படை விலகல் தொடர்பாக பெல்கிரேடில் ராஜீவ் காந்திக்கும், ரஞ்சன் விஜேரத்தினவுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகள் திருப்திகரமாக அமைந்ததாக தகவல் வெளியாகியது □

### 8 - 9 - 89 வெள்ளி

அமைதிப்படை விலகல் குறித்து பெல்கிரேட்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் காணப்பட்ட புதிய இணக்கம் நல்லதொரு உடன்பாடு என,ராஜீவ்காந்தி வர்ணித்தார் □ ஐந்து எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் □ அமைச்சர் ரஞ்சன் பெல்கிரேட்டிலிருந்து நாடு திரும்பினார் □ மட்டக்களப்பிலும் அதனையண்டிய பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது. சித்தாண்டியில் ஆலய உற்சவத்தில் ஒரு குழுவின்மீது மறுசாரார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்தே, இவ்வாறு அமுல் செய்யப்பட்டது □ பிரிட்டிஷ் கவுன்சில் பிரதிநிதிகள் யாழ். பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தனர்; பிரிட்டிஷ் நிறுவனத்தின் உதவியாக 3 கோடி ரூபா பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மாத இறுதியில் வந்துசேருமெனவும் தெரிவித்தனர் □

### 9 - 9 - 89 சனி

லக்ஷபான நீர்மின்சாரம் இன்னும் ஓரிரு வாரங்களில் வடபகுதிக்குக் கிடைக்கும் என, அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் தெரிவித்தார் □ யாக்கரை அமைதிப்படை முகாமில் நடைபெற்ற சந்திப்பில், வட-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, நிரந்தர அரசியற் தீர்வைக்காண முயற்சிக்க வேண்டுமென, வடமராட்சிப் பிரஜைகள் குழுவினர் கோரிக்கை விடுத்தனர் □

### 10 - 9 - 89 ஞாயிறு

கொக்குவில் பகுதி அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு, வீடுவீடாகத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ தெற்கில் தொடரும் தேடுதலில் 237 பேர் கைது செய்யப்பட்டனர் □ யாழ். பல்கலைக்கழகத்தில் மஹாகவியின் 'புதிய தொரு வீடு' நாடகம் காலையும் மாலையும் மேடையேற்றப்பட்டது; சிற்பக் கலைஞர் ஐ. விசுவலிங்கத்தின் மூன்று நாள் சிற்பக் கண்காட்சி, இன்று மாலை முடிவுற்றது □ பிரபல பௌத்த மதகுரு ஒருவர் அனுராதபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் □

### 11 - 9 - 89 திங்கள்

அமைதிப்படை விலகல் தொடர்பான கூட்டறிக்கையினை, இரண்டு அரசுகளும் இணைந்து ஓரிருதினங்களில் வெளியிடுமெனச் செய்திவெளியானது □ மொரட்டுவ பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பட்டுவிதான, அவரது அலுவலகத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் □ அளவ்வ ரயில் நிலையம் இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது □ மட்டக்களப்புப் பகுதியில் அரசடித்தீவு என்னுமிடத்தில், வாகனமொன்றில் வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 7பேர் உயிரிழந்தனர் □ சம்மாந்துறையில் கண்ணிவெடித்தாக்குதலில் 5 ஜவான்கள் கொல்லப்பட்டனர் □ தென்பகுதி வன்செயல்களில் 31 பேர் பலியாகினர் □

திசை
THISAI

# சர்வகட்சி மாநாடு வட-கிழக்கில் அமைதியை ஏற்படுத்துமா?

பிரேமாவின் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டை கூட்ட வேண்டி வநததன் காரணம் என்ன?

வீழ்ந்து போய்க் கொண்டிருக்கும் தனது ஆட்சிக்கு புத்துயிர் ஊட்டவும் அப்படிச் செய்வதன் மூலம் தனது ஸ்தானத்தையும் அதிகாரங்களையும் ஸ்திரப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படும் கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளவுமே இந்தச் சர்வகட்சி மாநாடு என்னும் கண்கட்டி வித்தை என்று, எதிர்க்கட்சிகளால் அபிப்பிராயம் சொல்லப்படுகிறது.

மாநாடு கூட்டப்படுவதன் உள்நோக்கம் வேறாக இருந்தாலும், அதன் வெளிநோக்கம் நாட்டின் இன்றைய அமைதியின்மையைப் போக்கவே எனச் சொல்லப்படுகிறது.

இந்த மாநாட்டில் ஜே வி. பி. கலந்து கொள்ளாத வரைக்கும் நாட்டில் அமைதி ஏற்படாது என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. அதே நேரத்தில் இம்மாநாட்டில் எல். ரி. ரி. ஈ. கலந்து கொள்வதால் வடக்கு—கிழக்கில் அமைதி ஏற்படுமா என இன்னொரு கேள்வி எழுந்துள்ளது

இதற்கிடையில் எல்.ரி.ரி.ஈ. யினர் ஒக்ரோபர் முதலாம் திகதிக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ். நிர்வகிக்கும் மாகாண அரசிலிருந்து விலகாதவர் நாட்டின் எதிரிகளாகக் கணிக்கப்படுவர் என்று அறிவித்திருப்பதும், அதை எதிர்கொள்வதுபோல், விடுதலைக்காகவும் அதன் எதிரிகளுக்கு எதிராகப் போராடுவதற்காகவும் ஒரு இளைஞனையாவது ஒவ்வொரு வீட்டாரும் தரவேண்டும் என்று 10.9.89 இல் ஈ.பி. ஆர். எல். எவ்வால் விடப்பட்ட துண்டுப் பிரசுரத்தையும் பார்க்கும்போது நிலைமை சீர் அடைவதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லையென்றே கூறவேண்டும்.

பஞ்சாபில், பஞ்சாபிய கெரில்லாக்களும், அவர்களுக்கெதிரான பஞ்சாபிய பிரசேர்வ் பொலிசாரும் தமக்குள்ளே பொருதிக்கொண்டு தம்மினத்தையே அழித்துக் கொள்வதுபோல், இங்கும் நேரலாம் என்றே கருதப்படுகிறது.

## இசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

### அணிசேரா மாநாட்டின் எதிர்காலம்?

கடந்த வாரம் முடிவுற்ற அணிசேரா நாடுகளின் நான் நாள் உச்சிமாநாடு, பெரிய ஆரவாரங்களுக்கும் பல எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட போதும், எதையும் சாதிக்காது முடிவடைந்த வெற்று ஒன்றுகூடலாகவே இது அமைந்தது; பலதரப்பட்ட ஐயப்பாடுகளை அரசியல் வடடாரங்களில் எழுப்பியுள்ளது.

இத்தகைய மாநாடுகள் அரசியல் ரீதியில் எதையும் சாதிக்க முடியாதவையாக இன்று கீழிறங்கி உள்ளமைக்குரிய காரணங்கள் என்ன?

1954 இல் பண்டுங் மாநாடு ஆரம்பிக்கப்பட்ட போதும், அதன் தொடர் விளைவாக 1961 இல் அணிசேரா மாநாடு ஆரம்பிக்கப்பட்ட போதும் இருந்த அரசியல் நிலைமைகள் அல்ல இன்று இருப்பவை. இன்று உலக அரசியல் நிலையில் ஏற்படடுள்ள பெரும் மாற்றங்களே இவற்றின் சாதனையின்மைக்கும் காரணமாக நிற்கின்றன எனலாம்.

முன்னர் முதலாளித்துவ நோக்கை பிரதிநிதித்துவப்படுத்திய அமெரிக்காவுக்கும் சோஷலிச அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரஷ்யாவுக்கும் ஏற்பட்டிருந்த யுத்தக் கெடுபிடியைச் சமப்படுத்தவும் அவ்விரு வல்லரசுகளின் அந்தரங்க நோக்கின் பகடைக்காயாகாது தம்மைப் பாதுகாக்கவுமே அணிசேரா இயக்கம் ஸ்தாபிதம் பெற்றது.

ஆனால் இன்றைய உலக அரசியல் போக்கு, குறிப்பாக கொர்பச்சேவின் தலைமையில் ரஷ்யா கடைப்பிடிக்கும் ராஜதந்திர அணுகுமுறை, நேட்டோ, வோர்சோ அணிகளைய புதிய இக்கட்டுக்குள் தள்ளியுள்ள நிலையில், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, எதுவித சாதனையும் இன்றி முடிவடைந்ததில் வியப்பில்லை.

இன்று அணிசேரா நாடுகளில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, இலங்கை, இன்னும் ஆபிரிக்க நாடுகள் பலவும் இரு பெரும் வல்லரசுகளில் ஏதாவது ஒன்றின் நிழலின் கீழேயே இயங்குவனவாய் இருப்பது அணிசேரா நாடுகள் எதுவும் அரசியல் ரீதியாக எதையும் சாதிக்க முடியாமைக்குக் காரணமாய் நிற்கிறது. இலங்கை இந்தியப் பிரச்சினைகூட இம் மாநாடடில் எடுத்துக் கொள்ளப்படாது, அங்கு தனிப்பட்ட ரீதியில் பேசிக் கொள்ளப்பட்டது இதற்கு உதாரணம்.

எனவே அரசியல் ரீதியில் எதையும் சாதிக்காத அணிகள் எதிர்காலத்தில் ஆட்டங்காணப் போவதோடு, புதிய ஒரு ''திட்டமிடப்பட்ட அணி'' யின் தேவையையுமே வேண்டி நிற்கின்றது. □

## இளைஞர்களை அமைதிப்படுத்தும் வழி?

இன்றைய இளைஞரின் ஆயுத மோகத்துக்கும் அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கும் மிகுந்த தொடர்பிருப்பதனால் அதை எவ்வாறு மேலும் வளராமல் தடுக்கலாம் என்பது பற்றி அரசு பலவழிகளிலும் சிந்தித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லுமுன் மாணவர்கள் பெற்றோரை வணங்கவேண்டும். சமய ஆசாரப்படி நடக்கவேண்டும் என்பதைப் போன்ற சாமான்ய விதிகளைக் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் இளம் பரம்பரையைத் திருத்தி விடலாம் என நம்பிய அரசு, தற்போது வேறு வழிகளைக் கவனத்துக்கு எடுப்பதில் இறங்கியுள்ளது.

முக்கியமாக கிராமப்புற இளைஞர்களிடையே பலவித தாழ்வுச் சிக்கல் இருப்பதாகவும் அவற்றைப் போக்குவதற்கு ஆங்கிலக் கல்வியும், உளவியல் கல்வியும் அவசியமென அரசு தற்போது நம்பத் தொடங்கியுள்ளதால், இப்பாடங்கள் தீவிரமாகப் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படலாம்.

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டட வேலைகள் கைவிடப்படுமா?

யாழ் ஆஸ்பத்திரி வளாகத்தில் 500 படுக்கைகளைக் கொண்ட ஐந்து மாடிக் கட்டட வேலைகள் இடையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. சமக்கோன் நிறுவனமும் யாழ். அரசாங்க அதிபரும் பொருந்திக் கொண்டதன்படி 1985 பிற் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இக் கட்டட வேலைகள் 1987 டிசம்பர் மாதத்துக்கிடையில் முடிந்திருக்கவேண்டுமாம். ஆனால், 1987 ஒக்ரோபர் சம்பவங்களுடன் சமக்கோன் நிறுவனம் கட்டட வேலைகளை இடைநிறுத்தம் செய்தது.

ஒக்ரோபர் 1987 அனர்த்தங்களின் போது ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் இருந்த ஒப்பந்தகாரரின் விலை உயர்ந்த மரங்களும், சில உபகரணங்களும் காணமற் போனதை அடுத்து, பெருந்தொகைப் பணத்தை அரசாங்க அதிபரிடமிருந்து சமக்கோன் நிறுவனம் நஷ்ட ஈடாகக், கோரியதிலிருந்தே கட்டட வேலைகள் தொடர்பான இழுபறி ஆரம்பித்ததாகத் தெரியவருகிறது.

இத்திட்டத்துக்கு ரூபா 26 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாம். இதே வேளையில் இது வரை முடிவுற்ற கட்டடத்திணைக்களப் பொறியியலாளரால் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளுக்கு, குறைந்தது ரூபா 4லட்சம், சமக்கோன் நிறுவனத்துக்கு அரசாங்க அதிபரிடமிருந்து வருமதியாக உள்ளதாம்.

வடிவமைப்பின் பிரகாரம் கட்டடம் முடிவுறும் போது இது வடபகுதியிலேயே மிக உயர்ந்த கட்டடமாக அமையுமாம். ஆனால், இந்த இடியப்பச் சிக்கலில் கட்டட வேலைகள் மீளத் தொடங்கும் சாத்தியக் கூறுகள், சமீபகாலத்தில் இல்லை. இதனால், வடபகுதிக்கு இத்திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்துக்கு 'என்ன வாகுமோ தெரியவில்லை.

## போபஸ் ஊழல் — புதிய வடிவம்

போபஸ் (Bofors) ஊழல் பற்றிய, இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சுந்தர்ஜியின் பேட்டி ராஜீவ் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

போபஸ் பீரங்கிக் கொள்வனவில் நிதிமுறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக, கணக்காய்வுக்குழு லோக் சபாவிற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தமை அனைவரும் அறிந்ததே. அதற்குமுன்பு ஆயுதம் பற்றிய நுட்பப் பரிசீலனைக்குழு, போபஸ் பீரங்கியைவிட பிரெஞ்சுப் பீரங்கியே தரமானதென்றும் அதனையே கொள்வனவு செய்யுமாறு சிபார்சு செய்திருந்ததென்றும், அதற்கு மாறாக போபஸ் நிறுவனத்திடம் பீரங்கி கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. மேற்கூறப்பட்ட இரு அறிக்கைகளும் உத்தியோக பூர்வமானது. அத்துடன் இப்பீரங்கிக் கொள்வனவு செய்த காலத்தில் தலைமைத் தளபதியாகக் கடமையாற்றிய சுந்தர்ஜி இது சம்பந்தமாக அளித்த பேட்டி, மேலும் குற்றச்சாட்டை வலுவூட்ட ஏதுவாயுள்ளது.

போபஸ் ஊழல் பற்றி எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைத்துவரும் வேளை ராஜீவ் அரசாங்கம் அதனை மறுத்து, இக்குற்றச்சாட்டானது அரசியல் உள்நோக்கம் கொண்டதென்றும், ஆதாரமற்றது என்றும், தனது அரசாங்கத்தின் மீது அவதூறு கற்பிக்கும் விஷமத்தனமான செயல் என்றும், எதிர்க்கட்சிகள் மீது பெரும் கண்டனத்தைச் செய்துவருவதும் அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் சுந்தர்ஜியின் பேட்டி ராஜீவை இதில் நேரடியாக மாட்டியுள்ளது.

சுந்தர்ஜியின் பேட்டியின்படி ராஜீவிற்கு இவ்வூழல் பற்றிய விடயம் ஏற்கனவே தெரிந்திருந்ததென்பது புலனாவதாக, எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

சுந்தர்ஜியின் இப்பேட்டியையும் ராஜீவ் அரசாங்கம் வழமைபோல மறுத்துரைத்துள்ளது. ஆனால் இந்தியப் பத்திரிகை உலகில் இப்பேட்டி ராஜீவிற்கு எதிரான அலைகளைத் தோற்றுவித்துள்ளது. □

## ஜே. ஆரது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொலையை கோழைத்தனமானது, அசிங்கமானது எனக் கண்டித்து ராஜீவ்காந்தி ஓர் அனுதாபச் செய்தியை ஜே. ஆருக்கு அனுப்பிவைத்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஒருவரது, அதுவும் அவரது சகோதரரின் மனைவியினது கொலைக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, மிகக் காரசாரமானவார்த்தைகளைப் பிரயோகித்து ராஜீவ் அனுதாபச் செய்தியை அனுப்பியமையானது, இக்கொலையின் முக்கியத்துவத்தை அதிகம் உணரத்தூண்டுகிறது.

எப்படியோ, மிகப் பூடகமான அரசியற் புரையோடல் ஒன்று தென்னிலங்கை அரசியலில் உள்ளது என்பது, தெளிவு.

## இந்திய....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்துவதாய்க் கருதுகின்றனர். அத்தோடு இலங்கையினதும் இந்தியாவினதும் உள்நாட்டு நெருக்கடிகள் இரு அரசுகளையும் நெருங்கிக்கொள்ளச் செய்துள்ளது. இருப்பினும் சோவியத் - இந்தியாவுக்கிடையில் எழுந்துள்ள இந்தப் போட்டி ஈழத் தமிழ் பேசும் இனத்தின் நலன்களை அள்ளிக்கொண்டு போகாது பார்த்துக் கொள்ளுதலே முக்கிய அம்சம் என்றும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 15-9-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.